# நமது வீரம்—அணையாத ஜோதி

# இலட்சிய யாத்திரை இன்பபுரிப் பயணமல்ல



# திராவிடநாடு

மலர் 9 | 24–12–50 | இதழ் 28

இலங்கை 15 சதம்] [விலை அணா 2



# தொல்லைகள் நமக்குத் தூசுகள்

## அவமானச் சின்னத்தை அழித்தே தீருவோம்

### நமது கடமை வளர்கிறது

### காஞ்சி மாநாட்டுத் தலைமையுரை

### சிற்றரசு முழக்கம்

"நம்முன் நிற்கும் வேலைகள் வானுயரக்கிடக்கின்றன. கடமை —விரிந்து கொண்டே இருக்கிறது. நடக்கவேண்டியபாதை வெகுதூரம். இதற்கு முன் நமக்கிருந்தஎதிரிகள் மதவாதிகளும், பணக்காரர்களுந்தான், இப்போதோ பலமான டெல்லி, பாராளுமன்றம், ஆட்கொல்லிச் சட்டங்கள்! கடும்புயல்களோடு எதிர்த்துச் செல்லவேண்டியவர்களாகிவிட்டோம்—கார்மேகங்கள், கடுமையான பனி, கல்லும் முள்ளும் நிரம்பிய காட்டுப்பாதை, இருட்டு நம்மை மிரட்டுகிறது—எனினும், நமது வீரமும் உறுதியும் வீண் போகாது விரும்பிய வெற்றியைப் பெற்றே தீருவோம்! அடைந்தே தீருவோம் இன்பத் திராவிடம்!!"

"வீரமும் தியாகமும் நமது சவப் பெட்டியோடு போய்விடாது. மானமும் ரோஷமும் நம்மோடு மடிந்துவிடப் போவதில்லை. அவை ஒரு சமுதாயத்தின்—சொத்துக்கள். நமது இலட்சியம் நனவாகும் வரை, அது குறையாது; தணியாது. நமது சுதந்திர தாகம் தீரும் வரை அவை வளர்ந்து கொண்டேயிருக்கும். அதை அறியாமல் துள்ளுவோர், விவேகிகள் அல்ல; அரசியல் அறியா அப்பாவிகள்!!"

என்று 23—12—50 அன்று காஞ்சி மு. அரங்கசாமி பந்தலில் துவங்கிய செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டின் தலைவர் தோழர் சி. பி. சிற்றரசு முழக்கமிட்டார். அவரது வீரப்பேச்சின்—சுருக்கத்தை, கீழே காண்க:—

வாதாபியின்மேல் படையெடுத்து பல்லவர் பெருமையை நிலைநாட்டிய பரஞ்சோதி என்ற வாள்வீரன் நடமாடிய பல்லவர் தலைநகரிலே முகாம் அமைத்திருக்கின்றோம்.

இது நமது போராட்டத்தின் பனிரெண்டாவது மாநாடு. இதற்கு முன் திராவிட நாட்டின் பலவேறு பகுதிகளில் மாவட்டங்கள்தோறும் மாநாடுகள கூட்டி, நமது வேலையை சிந்திக்கமுடியாத அளவுக்கு செயல் முறையிலே துரிதப்படுத்தி இருக்கிறோம். அதன் தீவிர நடவடிக்கையால் பல வெற்றிகளைக் கண்டிருக்கிறோம்.

வெற்றி என்றால், "வீர முரசம் கேட்கவில்லையே" என்று உங்களிடையிலே கேள்வி பிறக்கலாம் சென்னையில், குன்றத்தூரில், கும்பகோணத்தில் நாம் சிந்திய கொதிப்பேறிய ரத்தத் துளிகள், நமது இதயத்தில் முழக்கஞ் செய்துகொண்டிருக்கின்றன. அங்கே படிந்திருக்கும் ரத்த அடையாளங்கள், பருவ வேறுபாட்டால் மண்ணிலிருந்து மறையலாம், அல்லது ஆட்சியாளரே அதைத் தண்ணீரால் கழுவிவிட்டு, ஆசைத் தம்பியை மொட்டையடிக்கவில்லை என்றுசொன்னதைப்போல சொல்லிவிடலாம்! ஆனால், அந்த சோகக் காட்சி, நம்முடைய, நமது பின் சந்ததிகளுடைய மனதிலிருந்து மாறப் போவதில்லை

#### நாம் யார்?

ஆட்சியாளர்களுக்கு நாம் இடையூறாக இருக்கின்றோம் என்பது அவர்கள் குற்றச்சாட்டு. இந்த மண்ணின் மன்னர் பரம்பரை, சுதந்திரப் பிரியர்கள், கௌரவக் குடிகள், நமது முன்னோர் தவிர மற்ற யாரையும் ஆளவிடாமல்; அப்படி ஆள ஆசை

## அரிச்சுவடி அறியாத அப்பாவிகள்!

கொண்டவர்களையும் புறமுதுகிடச் செய்த வீர சந்ததியினர் நாம் என்பதை அவர்கள் உணராமலில்லை, ஆனால்ஒப்புக்கொள்ளமறுக்கிறார்கள்

சுதந்திர நாட்டில் ஜனநாயக உரிமைகள், வேட்டு சத்தத்தால் அடிபட்டுப் போகாதிருக்க ஆட்சி செய்யவேண்டும், அதுவே எங்கள் வேண்டுகோள் அல்லது எச்சரிக்கை என்று எதிர்கால அபாயத்தை எடுத்துக் காட்டிக்கொண்டிருப்பவர்கள் நாம். அராஜகமான புரட்சி மனப்பான்மையோடு, பொதுமக்கள் பாதுகாப்புக்கு எவ்வித இடையூறும் நேராவண்ணம், முன் அறிவிப்போடு சட்டத்திற்குட்பட்ட எல்லாவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளத் தயங்கமாட்டோம்என்பதை பகிரங்கமாக பிரகடனப்படுத்தியிருக்கிறோம்.

ஜனநாயக உரிமைகள், அறிஞன் ரூசோ எழுதிய சமுதாய ஒப்பந்தம் என்ற நூலில் ஒதுக்கி எடுத்த மை ஒட்டும் தாளாக இருக்கின்றதே தவிர, ஆட்சி ரத்த ஆட்சிதான் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். காந்தியார் உயிரோடிருந்தால், அவர் ரத்தக் கண்ணீர் வடித்திருப்பார். இட்லர் உயிரோடிருந்தால், அவனே நல்லவன் என்ற நற்சாட்சிப் பத்திரம் நாகிலம் வழங்கியிருக்கும்! முசோலினி மூச்சோடிருந்தால்,

முதுமையடைந்துவிட்டது உனது பாசிச வெறி பிடித்த சர்வாதிகாரம், எங்கள் நாட்டில், அந்த பாசிசவெறி இளமையோடிருப்பதைப் பார்! என்று இந்தியாவை சுட்டிக் காட்டி, குன்றத்தூரின்மேல் ஒரு அவமானக் கோட்டை வரைந்திருக்கும் நாகரீக நாடுகள். கொடியிலே அசோகர், கொள்கையிலே புத்தர், நினைவிலே காந்தியார், நிர்வாகமோ துப்பாக்கிப் பிரயோகம், 144, 153-எ தடையுத்திரவு, சொத்துகள் பறிமுதல், மொட்டையடித்தல், இவைகள் ஒரு அமைதியான ஆட்சியின் அடையாளங்களல்ல!

#### நாம் எதிரிகளா?

நம்மை அவர்கள் எதிரிகள் என்று கருதுவதைவிட, சரித்திரத் தந்தை பளித்த வரலாற்று நூலில், கால வெள்ளத்தால் நடந்த கடுமையான போராட்டங்களையும், அதனால் சிங்காதன பொம்மைகள் (அரசர்கள்)

சிறையை உடைத்த வீரம், கப்பலோட்டி கடல் கடந்த வீரம், அலையாண்ட கடலையடக்கியாண்ட வீரம், தனி மனிதன் சொத்தல்ல. அவை பொது உடைமைச் சொத்துக்கள். கடையில் விற்கும் பண்டமல்ல, பணமிருப்பவன் வாங்கிக்கொள்ள. கோழையின் நெஞ்சம் தவிர மற்ற எல்லா இடங்களிலும், மாற்றானுக்கஞ்சாது, நமது நாடு, நமது மொழி, நமது கலை என்ற உறுதிகொள்ளும் உண்மைத் தொண்டன் இருதய பீடத்தில், மனித சமுதாயத்தின் கடைசி ஆள் இருக்கும்வரை, உலக முடிவின் கடைசிநாள்வரை சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்கும் அணையாத ஜோதி.

#### எது நமது பகை?

நாம் பழமையை எதிர்க்கிறோம், பார்ப்பனியத்தைஎதிர்க்கிறோம்,பண்டார சன்னதிகளின் பாதகச் செயல்களை எதிர்க்கிறோம். இவைகளுக்

## காங்கிரஸ்—நெடுநாள் நிலைக்காது

சிறியதையும், கொலுமண்டபத்துத் தூண்கள் (மந்திரி பிரதானிகள்) நொக்கரித்ததையும், பிறகு நடந்த பெரும் பெரும் போராட்டங்களால் மணிமகுடங்கள் மண்ணில் உருண்டு அவைகளைத் தாங்கிய தலைகள் உருண்டு, அந்தத் தலைகள் ஒட்டிக் கொண்டிருந்த உடலைத் தாங்கிய சிங்காதனங்கள் காட்சி சாலைக்குக் கொண்டுபோன காட்சியைக் காணும் காலக் கண்ணாடியாக, நமது இயக்கத்தை அவர்கள் உபயோகித்துக் கொண்டால் விவேகமாக இருந்திருக்கும். அவர்களுக்கு வேதனையும் குறைந்திருக்கும்.

'காயமே இது பொய்யடா' என்று பேசுபவர்கள் அவர்கள்தான்; 'உயிர் நீர் மேல் குமிழியைப்போன்றது" என்ற வேதாந்தம் பேசுபவர்கள் அவர்கள்தான்; "இன்று இறந்தால் நாளைக்கு இரண்டு" என்று காலண்டரைக் கிழிப்பவர்களும் அவர்கள் தான். ஆனால், மந்திரி பதவி மாத்திரம் மாறாத வரம் பெற்றது என்று நினைக்கின்றதை எண்ணும்போது, அழுவதா? சிரிப்பதா? என்றே நமக்குத் தெரியவில்லை.

#### நேரமும் வீரமும்

நம்முடைய காலத்திலேயே நாம் நாட்டைப் பிரிப்போமா? மாட்டோமா? என்பதல்ல கேள்வி நமக்குப் பின் யார் வாரிசுகள் என்ற பயம் நமக்கில்லை. மானமும் ரோஷமும் நம்மோடு மயானத்துக்கு வந்துவிடக் கூடியதல்ல. வீரமும் தியாகமும் நமது சவப்பெட்டிக்குள்ளேயே சா

கெல்லாம் மதச்சார்பற்றப் பாராளுமன்றம் வேதனைப் படுகிறது. ராமாநுஜர் செய்யவேண்டிய ஏகலையை, மத்வர் செய்ய வேண்டிய மல்யுத்தத்தை, சங்கரர் செய்யவேண்டிய சமரை சர்க்கார் தொடுக்கிறது.

மதம், ஆத்திரத்தால் அலறுகிறது. அதை வீரம் என்கின்றனர் வெண்சாமரம் வீசிகள், வேதனையால் வாடுகிறது. அதை பெரிய சாதனை என்கின்றனர் தாசர்கள், கொப்பளைவிட்ட எண்ணெயைப் போல் கொதிக்கிறது அதன் நெஞ்சம், அதை கோர தாண்டவம், சேர தாண்டவம் என்கின்றனர் கொடிதாங்கிகள்.

வேலாயுதங்களுக்கும் சூலாயுதங்களுக்கும் கலங்காத நம்மை, ஆறுமுகங்களுக்கும் பனிரெண்டு கைகளுக்கும் அடிபணியாத நம்மை, கார்க்கோடகன் கனகத்தில் பறந்தவன் என்றெல்லாம் கக்கிய விஷச் சொற்களை விலாமுறிய அடித்த நம்மை, கனகவிஜயர்கள் கருத்தை நெரித்த நம்மை, காமராசர் பயமுறுத்துகிறார் கட்டைவிரலை எடுத்துவிடுவோம் என்று. திராவிடரின் சுட்டுவிரலின் மதிப்பறியாத மேதாவி!

பன்னெடுங் காலமாக நேர்மையாக வாழ்ந்த திராவிட இனத்தின் நெற்றியில், இந்நாட்டுக்குப்பகையாய்வந்த மதத் தலைவர்களால் இழுக்கப்பட்ட அவமானக் கோட்டைக் கலைத்தே தீருவோம் என்று எழும்புஞ் ராணுவத்தமுக்கின் பேரொலிதான் இந்த மாநாட்டின் எழுச்சியாகும்!

#### இயக்கம் எதற்காக?

பூனை வளர்ப்பவனைக் கேட்டால்,

## ராஜா வேடத்தில் திருடர்கள்!

ணடைந்துவிடக்கூடியவை யல்ல, அவைகள் சாகா வரம்பெற்றவை.

பெர்ஷிய மன்னன் வீரம், அவனை யடக்கிய எர்குலஸ் வீரம், நெப்போலியன் வீரம், அவனை சிறைபிடித்த நெல்சன் வீரம், இரண்டாம்சார்லஸ் சிரத்தைச் சேதித்த வீரம், வெள்ளையனை விரட்டிய பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை, கட்டபொம்மன் வீரம், பாஸ்டிலி

எலி உபத்திரவத்தைப்போக்க என்கிறான். நாய் வளர்ப்பவனைக் கேட்டால் திருடர்கள் பயம் என்கிறான். மான் வளர்ப்பவனைக் கேட்டால், குழந்தைகள் விளையாட என்கிறான், புலி, சிங்கத்தை வளர்ப்பவனைக் கேட்டால், வீரத்தைக் காட்ட என்கிறான்; உடல் பெருத்தவனைக் கேட்டால், ஊரார் மடத்தனமாகக்

(6-ம் பக்கம் பார்க்க)

# "ஒரு பொன் ஏடு"—முடிந்துவிட்டது!

திடமான உள்ளம், தனது செயலிலே நம்பிக்கை, வெற்றியிலே உறுதி, பொதுப்பணியிலே வேகம், பொறுப்பைச் சுமப்பதிலே ஆர்வம், அவசரத்துக்கு அடிமைப்படாத அளவு விவேகம், விரோதிகளையும் புன்சிரிப்பால் வீழ்த்துமளவுக்கு அன்பு, தன்னலமற்ற தியாகம் ஆகியவைகளால் பொதுப்பணிக்கு மெருகேற்றித் தந்த செயல்வீரர், குஜராத் சிங்கம், இந்தியத் துணைப் பிரதமர் சர்தார் பட்டேல் — மறைந்துவிட்டார். சுட்டுவிரல் காட்டி, சூதர்களையெல்லாம் மடக்கி இந்திய உபகண்டத்தின் வீரச் சின்னமாக விளங்கிய அவரது கடைசி மூச்சு 15-ந் தேதி காலை 9–37க்கு காற்றோடு கலந்துவிட்டது. மாபெரும் மாணிக்கம் அவர்—விடுதலைப் பாதையின் விவேகச் சுடர் சர்தார், உடல் வெந்து, சாம்பலாகிவிட்டது.

75 ஆண்டுகளுக்கு முன் 1875 அக். 31 குஜராத் பூமியிலே கரம்சாத் என்கிற கிராமத்திலே பிறந்த அவரது உடல், பிடி சாம்பராகிவிட்டது! மன்னாதி மன்னர்களையெல்லாம் தனது தலை அசைப்பால் தாழ்ந்திடச் செய்த வீர உருவம்—மறைந்துவிட்டது. இனி, அவரைக் காணமுடியாது. உறுதி தவழும், அந்தப் பரந்த முகம்—நம்பிக்கை ஒளிவீசும் அந்தக் கண்கள், எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று விளக்கும் அகன்ற நெற்றி, ஆழ்ந்த கருத்துக்களை அனுபவத்தோடு தரும் இதயம்—இங்கில்லை! போய்விட்டது!! நேரு அழுதாராம்! சி. ஆர். மவுனமாகக் கண்ணீர் சிந்தினாராம்!!

தோளோடு தோளிணைந்து, தங்களோடு 35 ஆண்டுகளாகப் பொதுப்பணி புரிந்த அவரைப் பிணக் கோலத்தில் கண்டபோது—அவர்



கள் பட்ட அவதியை எண்ணினால், எவரும் இதயங் கலங்கவே செய்வர்.

இந்தியாவின் தூண் என்றும் பர்தோலி வீரர் என்றும் சர்தார் என்றும் வல்லபர் என்றும் புகழ்ந்து கூறப்பட்ட அப் புருடோத்தமர் மறைவு கேட்டதும், நாம் கலங்கினோம்—நமது உள்ளம் துடித்தது! 'ஏதோ ஒரு பெரிய அதிர்ச்சி' நம்மைத் தாக்கிற்று!

'பட்டேல் மறைந்தார்' — என்ற செய்தி நமக்கு எட்டியதும், கடந்த 1949 பிப். 23-ந் தேதியன்று சென்னையில் பொதுக்கூட்டமொன்றில் பேசியபோது "தெற்கை எப்போதும் மதிப்பவன் நான். உங்களையெல்லாம் எப்போதும் சந்தித்து மகிழ நினைப்பவன் நான். ஆனால் நான் ஏற்ற பொறுப்பு எனக்கு ஓய்வு தராது. எனக்கும் வயதாகிவிட்டது. அநேகமாக இதுவே, சென்னையை நான் காணும் கடைசிமுறையாகக் கூட இருக்கலாம்" என்று, வெளியிட்ட காட்சி, நமது கவனத்துக்கு வந்தது.

பட்டேல்-கொள்கைகள், போக்கு, ஆகியவைகள் பலருக்குப் பிடிக்காமலிருக்கலாம்; அரசியல் மாறுபாடுகளின் காரணத்தால். ஆனால் அரசியல் வாழ்வில் ஈடுபட்டோருக்கு அவரது வாழ்க்கை ஒரு பொன் ஏடு. காரியம் சாதிக்க விரும்புவோருக்கு ஒரு காட்சிச் சித்திரம்.

1916-ல் 39-வது வயதில்—காந்தீயவாதியானார். 1928-ல் நடைபெற்ற வரி கொடா இயக்கத்தின்போது பர்தோலி வட்டார குடியானவர்களைத் திரட்டி, திறமையாகப் போர் புரிந்தார். சிறைவாசமும், ஆங்கில ஆதிபத்யத்தின் அடக்குமுறைகளும் அவரது வாழ்க்கையில் பலமுறை, புயல்களை வீசின.

புயல்களைப் புன்சிரிப்போடுஏற்று, பொதுப்பணியின் கஷ்டநஷ்டத்தை உணர்த்தினார். புதுப் பொறுப்புகளைத் தாங்கி, பொதுச் சேவையின் புனிதப் பாதையைக் காட்டினார். மக்கள் மனத்தைக் கவர்ந்து, மறையாத மாணிக்கமானார்.

உலகத்தில் பிறக்கும் பலகோடி மனிதர்களுள் ஒருவராகத்தான் பிறந்தார்—ஆனால் மறையும்போது பலகோடி மக்கள் கலங்கும்படி, அவரது வாழ்வு முடிந்திருக்கிறது.

அவர் மறைந்துவிட்டார்: இறப்பும் பிறப்பும் சகஜம்! ஆனால் அவரது மறைவு எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்துகிறது. பொதுச் சேவையில் அவர் கொண்டிருந்த ஆர்வ உணர்ச்சி — அவரை, இந்நாட்டின் 'முடி சூடா மன்னர்' ஆக்கிற்று. மக்கள் இதயத்திலெல்லாம் அவரது நாமத்தை, ஏற்றிவைத்தது.

'மனதில் ஒன்றும் வெளியில் ஒன்றும்' காட்டிக்கொண்டு திரியும், போலி அரசியல் வேடதாரிகள், பட்டேலுக்குப் பரம விரோதிகள். அவர்களைக் கண்டால் சீறுவாராம்—அச் செயல் வீரர்.

காரியத்திலே கண்ணாயிருந்து, அது முடிவதற்கான, தந்திரோபாயங்கள் அத்தனையையும் கையாளுவது—அவரது, தனிக் குணம். அத்தகைய மனித மாணிக்கங்கள், பொதுவாழ்விலிருப்போரிடையே தோன்றுவதே, ஒரு நாட்டின் நல்வாழ்வாகும்.

விடுதலைப் போரில், அவர் காட்டிய ஊக்கமும்திறமையும் அமோகம்.

அவை—விடுதலைக் கிளர்ச்சியிலீடுபட்டிருப்போரின் சிந்தனைக்கும் செயலுக்கும் உரியவை.

எண்ணியதை முடித்து, எல்லோரது இதயத்தையும் தமது பிரிவால் கலங்க வைத்துவிட்டுச் சென்றுவிட்டார். அவரது—பெயர், சரித்திரப் புகழைத் தாங்கிவிட்டது. அவர் மறைந்துவிட்டார்—அவரது உடல், பிடிசாம்பராகிவிட்டது! ஆனால் அவர் பெயர், தியாகம், பெருமை, மறையாது; அழியாது!

வாழ்க அவர் பெருமை!!

---

## ஆதரவு, அங்கும்!

சென்னை செந்தமிழ் இளைஞர்க் கழகத்தில் 18—11—50ல் நடந்த வ-உ-சி- தினத்தில கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர்.

தமிழர் அரசியல் சமுதாய பொருளாதாரத் துறைகளிலே முன்னேறுவதற்கும் அவர்களுடைய பண்பாட்டை வளர்த்துக்கொள்வதற்கும், பிறர் சுரண்டலிலிருந்தும் நம் நாட்டிலுள்ள சுரண்டும் கூட்டத்தினின்றும் காப்பாற்றிக்கொண்டு ஒரு புதிய சமுதாயத்தை அடைவதற்கு தமிழகம் இந்தியாவின் இதர பகுதிகளிலிருந்து பிரியவேண்டும்என்றும், அதற்காகச் செய்யப்படும் எல்லா கிளர்ச்சிகளுக்கும் இந்தக் கழகம் ஆதரவளிக்கும் என்றும், தெரிவித்துக்கொள்கிறது.

தமிழகத்திலுள்ள கட்சிகள் காங்கிரசு உட்பட சோஷியலிஸ்ட், தமிழரசு கம்யூனிஸ்ட், கருஞ்சட்டைக் கழகங்கள் எல்லாவற்றையும் பார்க்கையில்,காங்கிரசு கட்சியோ,சோஷியலிஸ்ட் தமிழரசு கம்யூனிஸ கட்சியோ தமிழரின் உணர்ச்சிகளையும் அவர்கள் வாழ்வின் அபிலாஷைகளையும் எடுத்துக்காட்டாத நிலைமையில் திராவிடர் இயக்கம் ஒன்றே தமிழரின் தனிப்பட்ட அமைப்பாகவிளங்குகிறது. அதன்மேல் எடுக்கப்படுகின்ற எந்த நடவடிக்கையும் தமிழரின்மேல் எடுக்கப்படும் நடவடிக்கையாக இக்கழகம் கருதுகின்றது.

தமிழர்கள் தங்கள் கருத்தையும், எதிர்ப்பையும் தெரிவிப்பதற்காக நடத்தும் கூட்டங்கள், கிளர்ச்சிகள் இவற்றிற்கு அரசாங்கம் அடிக்கடி தடை விதித்து அடக்குமுறைகளைக் கையாளுகிறது. அதன்மூலம் சம்பந்தப்பட்டவர்கள்மட்டுமின்றி, பொது மக்களுக்கும் இடையூறு நேரிடுகிறது. அந்தக்கூட்டங்களும்கிளர்ச்சிகளும் தமிழருக்காக நடத்தப்படுபவையாகையால் அவற்றின்மேல் தொடுக்கப்படும் அடக்குமுறைகள் தமிழர்கள்மேல் தொடுக்கப்பட்டதாகவே கருதுகின்றது.

வட இந்தியர் எதிர்ப்புக்கிளர்ச்சி, கருப்புக்கொடி காட்டல், இவற்றில் கையாளப்பட்ட அடக்கு முறைகளை இந்தக் கழகம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

—x—

## 'போதை' தெளியட்டும்!

மதுரை மாவட்டத்திலேயே, மிகவும் விளம்பரப் படுத்தப்பட்ட அம்மன் கூத்தனூர் அம்மன்—மடமையை வளர்க்க, மதியிருண்டபலரால் பயன்படுத்தப்பட்ட சிலைக்கடவுள். இந்த அம்மன் எக்குறியையும் கூறமுடியும் என்றும், எவரும் இந்த அம்மனிடம் சோதனைக்கு வந்து பார்க்கலாம் என்றும், நாத்திகம் பேசுவோரின் நாக்கையடக்கி விடுவாள் என்றும் பேசப்பட்டு வந்தது.

அம்மன் குடியிருப்பு நாராயணத் தேவன்பட்டியில்! அங்குள்ள தி. மு. க. தோழர்கள், ஏதோ சில பொருள்களை மறைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றனர். குறி கேட்டனர். பூசாரி ஏதும் தெரியாமல் விழித்தான். அம்மனோ, 'வழக்கம்போல்' வாய்மூடி மௌனியாக இருந்தது. கூடியிருந்த ஊர்மக்களோ உரக்க உரக்க சிரித்தனர். வந்த தோழர்களிடம் என்ன பொருள் இருக்கிறது என்று குறி சொலலும்படி வற்புறுத்தினர். பூசாரி திணறினான்—திக்கு முக்காடினான்—திருடன் போல் விழித்தான்.

அம்மன் பக்தர்களே, நம் தோழர்களைப் பாராட்டியதுமல்லாமல் ரூ. 10 கழகவளர்ச்சிக்கெனத்தந்தனர்.

## மனுவின் ஆட்சியா?

இராமனாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்ட சிங்கம் புணரி, சேகரம், அரசனாம்பட்டி கிராமங்களில் வதியும் தாழ்த்தப்பட்ட குல குடும்பங்கள் அவதித தீயிலே வெந்து சாகிறார்கள். சிங்கம்புணரி வட்டத்தில் பெரும்பாலும் இளமுகர் என்ற அம்பலக்காரர்கள் இருந்து வருகிறார்கள். அவர்களின் அடிமைகளாக இதுவரையில் ஆதித்திராவிடர்கள் இருந்து வருவதால், அம்பலக்காரர்கள் அவர்களை 'சவரம்' செய்துகொள்ள சவரக் கடைகளில் அனுமதிப்பதில்லை. காப்பி ஹோட்டல்களிலும் குடி தண்ணீர் குளங்களிலும் கோவில்களிலும் அனுமதிக்காமல் சதா சர்வகாலமும் அவர்களை அடிப்பதும் அபராதம் போடுவதும் ஆதித்திராவிடப் பெண்களை கொடுமைப்படுத்துவதுமாக இருந்து வருகிறார்கள்.

மேலும் இந்த ஏழைகளின் பேரில் அவர்கள் பொய் கேஸுகள் ஜோடிப்பதும் அவர்களுக்கு போலீஸார் உடைந்தையாக இருந்து நியாய ஸ்தலங்களுக்கு கொண்டுபோய் அநியாயமான சிலவுகள் தொல்லைகளுக்கு உள்ளாக்கி வருகிறார்கள்—அந்தோ பரிதாபம்!

அந்த ஏழைகள் படும் பாடு அவரவர்களுக்குத்தான் தெரியும். ஜனநாயக சர்க்காராம், ஆதித்திராவிடர்களுக்காகப் பாடு படுகிறதாம் காங்கிரஸ் சர்க்கார் தரித்திர நாராயணர்களுக்காகப் பாடுபடுவதாக, காந்தியார் வாழ்ந்த காலத்தில், ஹரிஜனங்கள் என்று பெயர் கொடுத்தனர். வருடத்திற் கொருநாள் எண்ணெயும் சீயக்காயும் எடுத்துச் சென்று ஹரிஜன சேவை செய்தனர். அவ்வளவுதான்! ஏழை பங்காளர்களான மேன்மை தங்கிய மந்திரிமார்களும் அவர்கள் படும் கஷ்டத்திலிருந்து விடுவிப்பதற்கு முன் வரவில்லை என்றால் நாம் அழுவதா, சிரிப்பதா என்பது விளங்கவில்லை. மந்திரிமார்களே இனியாவது அவர்களை இளமுக அம்பலக்காரர், அவர்களோடு சேர்ந்து 'கூத்தாடும்' போலீஸார் இவர்களின் கொடுமைகளிலிருந்து பகிரங்க விசாரணையின் மூலம் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் இல்லாவிட்டால் அவர்கள் மாண்டு மண்ணாகிவிடுவார்கள் என்பது உறுதியாகும் சர்க்காரின் கவனத்திற்கு மேல்கண்ட விபரத்தை கொண்டுவரப் பட்டிருக்கிறது என அக்குல முன்னேற்ற ஊழியர் சோமசுந்தரம் அறிவிக்கிறார், ஒழுகும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு!

## மதவெறிக்கோர் எடுத்துக்காட்டு

காஞ்சிபுரம் இரெட்டியப்பட்டி மாணவர் விடுதியில் 10—12—50 ஞாயிறன்று ஒரு மாணவன் தக்காளிச் செடிக்குப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தபோது கால் தவறி துளசிச் செடியை மிதித்துவிட்டமையால் துளசிச் செடி ஒடிந்துவிட்டது அம்மாணவன் அந்தத் துளசிச் செடியை பிடுங்கி எறிந்துவிட்டான். அது தெரிந்த விடுதி காப்பாளர் ஸ்ரீவைணவர் திரு ஆ. நரசிம்மலு நாயுடு அவர்கள் அம்மாணவனை விடுதியினின்றும் வெளியே அனுப்பிவிட்டார் அம்மாணவன் தன்னை கருணை கூர்ந்து மன்னிக்குமாறு மன்றாடிக் கேட்டுக்கொண்டும் சிறிதும் கருணை காட்டாது வெளியே துரத்திவிட்டது மிக வருந்தற்குரியது.

---

**புதிய முகவரி**

கண்ணதாசன்
'ஹ்யூமன் காட்டேஜ்'
முத்துப்பட்டணம், காரைக்குடி.

# பாரதிதாசன் மணிவிழா



காஞ்சி மாநாட்டுத் தலைவர்,

**தோழர் சிற்றரசு.**

தமிழ் நாட்டின் புரட்சிக் கவியரசர் பாரதிதாசன் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவினை, வருகிற ஏப்ரல் 29-ம் நாள் தமிழ்நாட்டில் சிறப்புறக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள செயற்குழு ஒன்றை 10-12-50ல் திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் இல்லத்தில் கூடிய தமிழன்பர்கள், தேர்ந்தெடுத்தார்கள். கூட்டத்திற்கு தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அன்பர்கள் வந்து கலந்து கொண்டார்கள். கூட்டம் திருமதி வைசு மஞ்சுளாபாய் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதலில் விழா சம்பந்தமாக அன்பர் பலர் எழுதியிருந்த கடிதங்கள் படிக்கப் பெற்றபின்னர், கவிஞர் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை அவர் பிறந்தநாளையொட்டி வருகிற 1951 ஏப்ரல் கடைசி ஞாயிறில் நடத்துவது, மணிவிழாவை திருச்சியில் நடத்துவது, விழாவில், கவிஞருக்கு பொன்னாடை போர்த்துதல், பொற்கிழி யளித்தல், பாரதிதாசன் கவிதைகளில் பாட்டுப்போட்டி நடத்தி வெற்றி பெற்றோர்க்குப் பரிசளித்தல் "கவிதை"—"தமிழ்" என்ற பொருள்களில் தமிழ் நாட்டுக் கவிஞர்களின் கவியரங்கு ஒன்றை பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடத்துதல், விழா நிகழ்ச்சிகளை வானொலியில் ஒலி பரப்ப ஏற்பாடு செய்தல், கவிஞரைப் பற்றியும் அவரது கவிதைகளைப் பற்றியும் தீட்டப் பெற்ற கருத்தோவியங்கள் கொண்ட தொகுப்பு நூல் ஒன்றை வெளியிடுதல்—(இதை வெளியிடும் உரிமையை குறிப்பிட்ட எவருக்கும் வழங்கப் பெறும்)—கவிஞர் எழுதிய நாடகத்துள் ஒன்றினை விழாவன்று இரவில் நாடகமாக நடித்துக் காட்டுதல் ஆகிய முறையில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டுமெனவும், விழாவுக்குத் தலைமை தாங்க தோழர்கள் குமாரசாமி ராஜா, ஆர். கே. சண்முகம், சோமசுந்தர பாரதியார் இவர்களை முறையே கேட்பது எனவும் முடிவு செய்யப் பெற்றன.

விழாவினை நடத்துவதற்கு கீழ்க்கண்டவர்களைக் கொண்ட நிரந்தர செயற் குழு அமைக்கப்பெற்றது.

தலைவர் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆசிரியர் 'தமிழர் நாடு'

துணைத் தலைவர்கள்: தோழர்கள் டி. எஸ். சொக்கலிங்கம், ஆசிரியர் 'தினசரி', ரா. கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர் 'கல்கி', சி. என். அண்ணாதுரை, ஆசிரியர் 'திராவிட நாடு', நாரண துரைக்கண்ணன், ஆசிரியர் 'பிரசண்ட விகடன்'.

கூட்டு அமைச்சர்கள்: திருலோக—சீதாராம் — திரு. அன்பில் தர்மலிங்கம்.

துணை அமைச்சர்கள்: தோழர்கள், புத்தனேரி ரா. வெங்கடாசலம், தஞ்சை ஏ. கே. வேலன், கோவை 'வசந்தம்' ஆசிரியர் ஆர். திருஞான சம்பந்தம், சென்னை இரா-நெடுஞ்செழியன், காஞ்சி காத்தான் வைசு. மஞ்சுளாபாய் புலவர் என். டி. அரசன்.

பொருளாளர்: தலைவர் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம்.

தமிழ் நாட்டின் எல்லா பகுதிகளிலிருந்தும், செயலுறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

—



காஞ்சி மாநாட்டைத் துவக்கி வைத்த

**தோழர் ஆசைத்தம்பி.**

## நாஞ்சில் மாநாடு

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. மாநாடு நாகர் கோவிலில் கிருஷ்ணன் கோவில் ஆங்கிலப் பாடசாலையின் சமீபம் அமைந்துள்ள தியாகராயர் பந்தலில் டிசம்பர் 29, 30 (வெள்ளி சனி) நாட்களில் நடைபெற இருக்கிறது.

வெளியூர்த் தோழர்களுக்கு நாகர்கோவில்—திருநெல்வேலி, திருவனந்தபுரம்—நாகர்கோவில் பாதைகளில் அதிக பஸ் போக்குவரத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாநாட்டுப் பந்தலுக்கருகே, பல தனிப்பட்ட உணவு விடுதிகள் நடத்த ஏற்பாடாகியிருக்கின்றன.

இரண்டு நாள் நிகழ்ச்சிகளுக்கும் மாநாட்டுக் கட்டண விபரம்:—

வரவேற்புக் குழு உறுப்பினர் ரூ 5,
பிரதிநிதி ரூ 3, பார்வையாளர் ரூ 2,
பெண்களுக்கு ரூ 1

—

## பெண்கள் பாசறை

*

17—12—50 ஞாயிறு பிற்பகல் 2-மணிக்கு சென்னை சேப்பாக்கம், அருணாசல ஆச்சாரித் தெரு 13-ம் எண் தோழியர் அலமேலு அப்பாதுரை இல்லத்தில் திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடந்தது.

தோழியர் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் தலைமை வகித்தார். இருபத்துமூன்று செயற்குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் தோழியர்கள் ஜோதீஸ்வரி, மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், பூங்கோதை, புலவர் எயினிலா ரெண்ள், கலையரசி, மனோரஞ்சிதம், சத்திய வாணிமுத்து, செல்வக்கண்ணம்மாள், இராமதிலகம், செண்பகவல்லியம்மாள், சுசிலா, சீதாப்பாள், தங்கம்மாள், பட்டம்மாள், ராஜேஸ்வரி, பிச்சையம்மாள், நீலாம்பாள், அலமேலு ஆகியோருடன் இன்னும் பலரும் வந்திருந்தனர்.

முன்னுரையாக தலைவர், பெண்களின் தனியமைப்பைப் பற்றிப் பேசிய பிறகு, செயலாளர் தோழியர் அலமேலு அம்மையார், இராமாமிர்தத்தம்மையார் பேசினர்.

7—1—51ல் கழகத் துவக்க விழா நடத்துவதெனவும், தோழியர் ஏ. கே. டி. ஆதிலட்சுமி அம்மையார் விழாவிற்கு தலைமை வகிக்கக் கேட்பதெனவும், அன்னை ஈ. வே. ரா. நாகம்மையார் படத்தை, தோழியர் ஜோதீஸ்வரி அம்மையார் திறந்து வைக்கும்படிக் கேட்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

—

## வாழ்க மணமக்கள்



26—11—50 அன்று ஞாயிறு மாலை 4-மணியளவில் நமது இயக்கத் தோழர் பி. ஏ. கே. பழனிசாமி அவர்களின் தங்கை ஞானசௌந்தரி—மதிப்பிரகாசம் தம்பதிகள், புரட்சிப் பாதையிலே புது உதக பயணம் நடத்தக் கிளம்பி விட்டனர். வாழ்க மணமக்கள்!


**'சூழ்நிலை'யின் முதல் வெளியீடு!**

புரட்சிக் கவிஞரின், "இரக்கச் சுவைதரும் இனிய கதை இது;
நடையும் மிகமிக நன்று; தடையிலாது
நிகழ்ச்சியின் ஓட்டம் மகிழ்ச்சி யளிப்பதே"

என்ற சிறப்புரை பெற்ற

**"பழி"** (நாவரசு எழுதியது)

விலை நாலணா. விற்பனைக் கழிவு 25%

**'சூழ்நிலை வெளியீடு'**
1/231. தங்கசாலை, சென்னை 1.


## திருவத்திபுரம் பொங்கல் விழா

ஆண்டுதோறும், இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்றுவரும் "பொங்கல் விழா" இவ்வாண்டும், மிகச் சிறப்பு முறையில் நடைபெற ஏற்பாடுகள் துவக்கப்பட்டு விட்டன.

விழா வழக்கம் போலதைத் திங்கள் 5ம் நாள் (18-11-51) துவங்கி, 12ம் நாள் (25-1-51) வரை நடைபெறும்.

விழாவிற்கு நம் கழகப் பேச்சாளர்கள் அனைவரையும் சொற்பொழிவாற்ற அழைக்க தீர்மானிக்கப்பட்டது.

விழா நாட்களில், ஒருநாள் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி (தன் குழுவினருடன்) நாடகம் நடைபெறவும் ஏற்பாடாகிறது. விவரம் பின்னர் அறிவிக்கப் பெறும்.

—

## மாணவ அணிவகுப்பு

**குடந்தை**

13—11—50ல் தி. மு. மா. கழக சார்பில் தோழர் வீ. அழகையன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எம். ஏ.; எல். டி., கே. கே. நீலமேகம், எஸ். கே. சாமி பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் செயலாளர் இராசகோபால் நன்றி கூறவுடன் கூட்டம் இனிது முடிந்தது.

**கொரணத்தூர்**

19—11—50ல் தி. மு. மா. க. அமைக்கப்பட்டது. செயலாளர்:- வடிவேல், துணைச் செயலாளர்:— வெங்கட்டன், நிதி உறுப்பினர்:— முகம்மது, வி. உறுப்பினர்:-வேணு. இன்னும் எட்டு பேர் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

**வாணியம்பாடி**

26 11—50ல் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் பொதுமறைமாணவ மன்றம் துவக்கப்பட்டது. தலைவர்:- சின்னராசன், செயலாளர்கள்:- வ. கோ. செல்வராசன், நடராசன், பொருள் உறுப்பினர்:- மாலிக், விளம்பர உறுப்பினர்கள்:- கெங்காதரன், எஸ். என். நடராசன் இன்னும் உபச்சாரக் குழு, சட்ட திட்டக் குழு, அமைப்புக் குழு என பல குழுக்கள் அமைக்கப்பட்டன.

27—11—50 மாலை 5 மணிக்கு தோழர் தன. இராமச்சந்திரன் தலைமையில் மாணவர்கள் கூடி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அமைத்தனர். கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:- எ.எல். முனிரத்தினம், துணைச் செயலாளர்:- இரா. நடராசன், அமைப்பாளர்:— தன. இராமச்சந்திரன் பொருளாளர்:- அ. இரா. அன்பரசு விளம்பர உறுப்பினர்:- வி. இளமுருகன் மற்றும் 14 பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

திராவிட நாடு
ஞாயிறு] 24—12—50 [காஞ்சி

# முழக்கம்

—:×:—

"எலிகள் புசிக்க
எல்லாம் கொடுத்தே
சிங்க ஏறுகள்
ஏங்கிடுமோ?—இனிப்
புலிகள் நரிக்குப்
புசிப்பளித்தே
பெரும் புதரினில்
தூங்கிடுமோ?"

★

முடியாது! ஒருக்காலும் முடியாது!! பொறுத்தது போதும்; இனி நம்மால் புதரினில் பதுங்கியிருக்க முடியாது! சித்திரவதையைத் தாங்கிக் கிடக்க, நாம் 'தர்ப்பாசூரர்' பரம்பரையல்ல! நமது நரம்புகள்—மண் கூடுகளல்ல, தமிழகத்தின் வெற்றி வாட்கள்! நமது உடலிலே ஓடுவது நீரல்ல; செங்குருதி! நாம் ஏழைகளாய், மோழைகளாய், குடிசைகளில் குந்திக் கிடந்துவிட இனி முடியாது! 'ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை' என்று ஆர்ப்பரிக்கும் நமது இதய முரசை, இனியும் நாம் எழுப்பாமலிருக்க முடியாது!

வாளும் வேலும் தாங்கி வாழ்ந்த பரம்பரை, வெறும் 'காகிதக் கோட்டை'களைக் கண்டு கலங்கிக் கிடக்கப் போவதில்லை! நாளும் கோளும்—நமக்கில்லை! நமது பணி, நடைபெறாத நாளில்லை நாட்டில். நமது உரிமை முழக்கம், எதிரிகளின் கேலிகளைத் தவிடு பொடியாக்கி, மாற்றாரின் மன இருளைப் போக்கி, 'மண் பிண்டங்களை'யும் மனித உருவாக்கி, மகத்தான பேருரு எடுத்து வருவதை—வீணுக்கிவிட மாட்டோம்!

நாம் வீணர்களல்ல; வீழ்ந்துபட்ட மாபெரும் சமுதாயத்தின் விடுதலைத் தூதுவர்கள்.

சூது மதியும் சுயநல வாதமும் பேதத் திமிரும், பித்து நினைவும் கொண்டு திரிவோரின் கொட்டம் ஒடுங்க—கொள்கை வாளைக் குறிப்பறிந்து வீசி, கொடுமை களையப் போராடும் நாம்—தூங்கும் புலிகளாக, இனி இருக்க; இருக்கவும் முடியாது!

கார்மேகங்களோடு புயலும் இடியும், மழையும் நாசமும் நம்மைத் தாக்கத் துவங்கிவிட்டன அகிலும் தேக்கும் அழியாக் குன்றமும் கொண்ட நமது இன்ப பூமி, ஏழைகளின் பிணங்களைத் தாங்கும் துன்ப பூமியாவதைச் சகித்துக் கிடக்க நாம் 'தசைப் பொதிகள்' அல்ல! சாமிகளையும் சித்தர்களையும் 'வரப்பிரசாத' மகிமைகளையும், பயக்க விளக்கங்களையும் கேட்டு, பாண்டு மடிந்த நாட்கள் விலகிவிட்டன. இனியும் மதோன்மத்தராயிருக்க முடியாது! மார் நிமிர்ந்து, தோள்தட்டி போர்ப் பரணி பாடி, பாசறை நோக்கிப் புறப்பட்டுவிட்ட நாம் இனியும், வாளாயிரோம்! வஞ்சகரின் தாள் பணிந்தது போதும்; இனியும் அவர்களுடைய தாசர்களாக இருக்க முடியாது!

விண் அதிர, மண் கலங்க, இடியும் புயலும் போட்டியிட, நமது கொள்கையின் சக்தி, 'பிடிவாதக் கோட்டைகளை' தூள், தூளாக்க வேண்டும்! 'எள்ளிச் சிரிக்காதே தள்ளிவருகுது வேல்!' என்று துடுக்குத்தனமுடையோரின், இடுப்பை யொடிக்கவேண்டிய "இன்பநாள்" நம்மை நோக்கி பவனி வரத்துவங்கி விட்டது!

"பாரில் நாமே—பழம்புகழ் உடையோம்" என்ற பரம்பரைப் பெருமைகளைப்பேசிவிட்டுப் போய் விடும், பெருமிதப்போக்கு, இனி பலன்தர முடியாது! பொறுத்தோம் — இனியும் பொறுமைக்கு இடமில்லை!!

பொங்கும் நம் உணர்ச்சியை, ததும்பிவழியும் நமது சுதந்திரத் தாகத்தை வெளிக் காட்டவேண்டிய வேளைகள் — வந்துவிட்டன. நமது உடலிலே தியாகத்தழும்புகள், இடம் பெறவேண்டியநேரம் வந்துவிட்டது.

துப்பாக்கி! சாதாரண ஆயுதம், நமக்கு.

குண்டுமாரி! நம் கொள்கை வெறிக்குமுன் சிறுதூசு.

தடியடி! மாற்றார்வீசும் கொடுமை அடிகளைவிடச் சாதாரணமானது.

சிறைச்சாலை! மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, நமக்கு!

இந்த அடக்குமுறைகளால், நமது இதயம் கலங்காதுஎன்பதைக் காட்டிவிட்டோம்.

"அடி! உதை! குத்து! சுடு! எதற்கும் அஞ்சோம். எமது பணியை விடோம்!" என்று முரசொலித்துக் கொண்டேயிருக்கிறோம்.

எட்டுமுறை சுட்டுப்பொசுக்கினர்—கலங்கினோமில்லை, 'நல்லுரிமை நம் மூச்சு' என்ற கானம்தான் கிளம்பிற்று!

கலவரம் செய்தோம் என்று வழக்குப்போட்டனர்—'வா! நீதி மன்றத்துக்கு' என்று அழைத்துவிட்டோம்!

தடியடி தர்பார் நடத்தினர்—'தாங்கிக்கொள்ளும் பெரும் படை இதனைப் பாரீர்!' என்று பட்டாளத்துத் தம்பிகளைக் காட்டினோம்!

நமது வீரம் — சோரம் போய் விடாது. சேரன் பரம்பரை 'கனக விசயர்' கதறலுக்காக, காலில் வீழ்ந்து விடாது. நமது குருதி, வீரமறியா வீணர்களின் மிரட்டலால், வற்றிப்போய் விடாது.

அடக்குமுறை அம்புகளை, ஓயாது, ஒழியாது வீசிக்கொண்டேயிருக்கின்றனர் — வீம்பு எண்ணங் கொண்ட ஆட்சியாளர்கள்.

நமது சென்னை அலுவலகத்திலே கிடந்த, 'காகித மூட்டை'களை, அந்தி நேரத்தில், கொண்டுசென்றனர், "ரூ. 700 தரமாட்டாயோ?" என்று கேலி பேசுவது போல. நாம் சிந்தாகூலம் கொள்ளவில்லை! சிரித்தோம்—

"சந்திசிரிக்கிறதப்பா, உங்கள் ஆட்சி! நீங்கள் மந்திரிகளாய் வந்ததுமுதல் என்னென்ன கோளாறு புரிந்தீர்கள் என்று குற்றப் பட்டியல் சாட்டுகிறார் உங்கள், சகா—மாஜி பிரதமர் பிரகாசம். அதை மறைக்க, வழியும் வக்குமில்லாத நீங்கள் எங்களது 'காகித மூட்டைகளை'த் தூக்கிச் செல்லுகிறீர்கள். பாவம்! பெரிய எழுத்தில் உங்கள் குற்றங்களை மறைத்து அச்சிட்டு ஒட்டவாவது அந்தக் காகிதங்கள் பயன் படட்டும்! உங்கள் நாற்றம், வெளியில் தெரியாமல் தடுக்கவாவது எமது காகிதங்கள் பிரயோசனமாகட்டும்! பெரிய எழுத்துக்களில்—உங்களைப் பற்றி அச்சடித்து, ஊர் முழுதும் ஒட்டிக் கொள்ளுங்கள்" என்று, அலட்சியத்தையே காட்டினோம்.

சந்தி சிரிக்கும் சர்க்கார் — நம் மீது சமர் தொடுக்கிறது!

ஆயினும் நாம், அதைக் கண்டு கலங்கவில்லை—பரிதாபப் படுகிறோம்!

கொடுமைகளை வீசி மக்களை அடக்கிட மனப்பால் குடித்து கடைசியில் வீழ்ந்து ஒழிந்தோரின் சரிதம்—நமக்கு நன்றாகத் தெரியும்.

ஆனாலும் நம்மை மிரட்டுகிறார்கள் இந்த 'பொம்மைகள்'!

'சலசல' வென்ற சப்தம் கேட்டதும் பயந்து பதுங்கும் பனங்காட்டு நரிகள்—நாம், என்று எண்ணிக் கொண்டு!

நாம் எதற்கும் கலங்கவில்லை—எடுத்த காரியங்களை வெற்றிகரமாக்கிக்கொண்டே வருகிறோம்.

'வடநாட்டு மந்திரிகளைப் பகிஷ்கரிப்போம்' என்று முடிவு செய்தோம். விளைவு, பல கொடுமைகளுக்காளாகினும், நாம் அயர்ந்தோமில்லை!

பேச்சுரிமை நிலைநாட்ட குன்றத்தூரிலும், நாரணமங்கலத்திலும் அறப்போர் துவக்கினோம். கொடுமை தாண்டவமாடச் செய்தனர்—கோலேந்திகள். தயங்கவில்லை நாம்!

நமது நடவடிக்கைகள் — இலட்சியப் படிக்கட்டுகள்.

வீர முழக்கமிட்டுவிட்டு, காரியம் முடிந்ததா, போதும் என்று கணக்குப் போட்டுப் பார்க்கும் காரியமல்ல நமது பணி; ஒரு பெரிய நாட்டையே மீட்பது. எனவேதான், 'அவசர முடிவுகள்' நம்மை அண்ட முடிவதில்லை; பொறுப்போடு பணி புரிந்து கொண்டிருக்கிறோம்.

பொறுப்பின் செல்வர்களாக விளங்கும் நமது கிளைக் கழகங்களுக்குத் தங்கள் "சக்தி"யைக் காட்ட, சந்தர்ப்பம் வந்துவிட்டது. துடித்துக் கிளம்பும், தூண்டா விளக்குகளாம் நமது தொண்டர் மணிகளுக்குச் சுவையான தோர் செய்தி:

முன்பு வருவதாக அறிக்கைதந்துவிட்டு, கடைசி நேரத்தில் வராமற்போன டில்லி கைத்தொழில் மந்திரி அரிகிருஷ்ணமஹ்தாப்—தென்னாட்டின் பல பகுதிகளிலும் டிசம்பர் 3-ந்தேதி முதல் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறாராம். (விபரம் வேறிடத்தில்) டில்லி மந்திரி—வருகிறார்! வடநாட்டு ஆதிபத்தியத்தின் பிம்பம் வருகிறார்!!

வரும் செய்தியறிந்து, நமதுகிளைக் கழகத்தினர், தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்திற்காகமகிழ்ச்சியடைவர் என்பதை நாம் அறிவோம்!

தங்கள் வீரத்தைக் காட்டிடும், சந்தர்ப்பம் கிடைத்தது-என் றமகிழ்வோடு இருந்துவிட்டால் மட்டும் போதாது!

நமது சக்தியைத்திரட்டி, டில்லி மந்திரி, கலங்குமாறு காட்டிட வேண்டும் கருப்புக் கொடிகளை.

நமது உரிமை முழக்கத்தின் உண்மையை உணர்த்தும், கருப்புக் கொடி நாள் அமைதியோடு, ஆங்காங்கு நடைபெற வேண்டும்.

நாம் அமைதியோடு இருந்தாலும்-கண்ணியத்தோடு இருந்தாலும்-இப்போதைய ஆளவந்தார் 'நம்மைப் போலவே' இருப்பர், என்று எண்ண முடியாது!

ஏனெனில் நம்மைத்திண்டாடச் செய்வதும், நமது பொருள்களைச் சூறையாடுவதுமே, இந்தசர்க்காரின் திருப்பணியாயிருக்கிறது.

ரூ 700 கட்டவேண்டும் என்று காரணங்காட்டி தி. க. தலைவர் பெரியார் அவர்களது காரைக்கொண்டு போய், போலிஸ் பாராவில் வைத்துச்சீரழிக்கும், கெடுமதிகொண்ட இந்த ஆட்சியில் கண்ணியத்தைநாம் எதிர்பார்க்க முடியாது!

கண்ணியமும், நல்லாட்சியும்இந்த ஆட்சியில் மக்கள் காணமுடியாப் பொருளாகும்.

எனவே, நாம் கருப்புக்கொடிகாட்டப்போகிறோம் என்று அறிந்ததும் தடிகளைத் தூக்கி விடலாம்! துப்பாக்கிகளுக்கு வேலை தரலாம்! குண்டுமாரிகளைக்கொட்டலாம்! பிடித்து லாரியிலேகொண்டு செல்லலாம்! எலும்புகளை முறிக்கலாம்—நரம்புகளை அறுக்கலாம்—மார்புகளைத் துளைக்கலாம்—மனிதாபிமானம் இல்லாது கையிலே விலங்கிட்டு நம்மை இழுத்துச் செல்லலாம்! நாம் எதிர்பாராத, கேடுகளும் அடக்குமுறைகளும், நம்மீது வீசப்படலாம்,

ஏன்? நமது உயிர்கள்கூட, இந்த மண்ணிலிருந்து பிரிக்கப்படலாம், குண்டுகள் மூலம்!

துப்பாக்கிகள் அலறக் கூடும்—பரவாயில்லை.

தடியடி தர்பார் நடக்கக் கூடும்—பரவாயில்லை.

நமது இரத்தம் வீண்போகாது. அடக்கு முறைக் கொடுமையால் நாம் எதையும் இழந்துவிட மாட்டோம்! அதிகமாகப் போனால்—எது போகும்—நமது உயிர்போகும்!

போனால் போகட்டுமே! கேடுற்று! சீர்குலைந்து 'நாயும் பேயும்' உலவும் நாட்டின் நல்வாழ்வுக்காக, நமது உயிரைக் கொடுத்தோம் என்ற பெருமையாவது, நமக்குப் பின்னால் நிலவும்!

ஐந்நூற்றுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் ஓரிஸாவிலுள்ள ரந்தாளி என்ற இடத்தில் நேப்பாளபாபா என்ற, ஒரு போலி வேடதாரியால் கடந்த வாரம் இறந்தனராம். மாயமருந்து வாங்கவந்து, காலராவுக்கு இரையாகி, உயிர் துறந்தனராம், மூன்றே நாட்களில்!

அதுபோல இல்லாது, நல்ல இலட்சியத்திற்காக நமது உயிர் போனால்தான் என்ன!

கேடுகெட்ட ஆட்சியின் கொடுமைக்குச் சாவுமணி அடிக்கும் காற்றாகவாவது நமதுகடைசிமூச்சுப் பயன்பட்டது என்று சரித்திரம் சாற்றாமலா போகும்!

வேதனைக்காகப்போராடி, வேதனையால் சாகடிக்கப்பட்ட சமுதாயத்திற்காக—கேவலம்—நமது உடலையும் உயிரையும் தத்தம் செய்யவும் கூசும் ஏமாளிகளல்ல நாம்!

இதை, நம்மை ஆட்டிப் படைக்கும் ஆணவப் பொம்மைகளுக்கு உணர்த்துவோம். மஹதாப் — வருகையின் போது, நமது மகத்தான இலட்சிய கீதத்தை நமது வீரத்தால் எழுப்புவோம்! நாடெங்கும் கருப்புக் கொடி காட்டி நமது சக்தியை உணர்த்துவோம்! நமது பணி—ஓயாத் தொடர் கதை. அதைநமது இரத்தத்தால் எழுதுவோம்! வெற்றி நமதே!

———

## பெயர் மாறுதல்:

கோயமுத்தூரில் நிறுவப்பெற்று ஓங்கி வளர்ந்து வரும்
இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொசைடி, லிமிடெட்
**இந்தியா லைப் & ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொசைடி, லிமிடெட்**
என்று பெயர் மாறுதல் அடைந்திருப்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
ஸ்ரீ. T. A. ராமலிங்கம் செட்டியார், B A., B L., M.P., சேர்மன்.
ஸ்ரீ. M. S. பழனியப்ப முதலியார், B A., மானேஜிங் டைரெக்டர்.
(Ad) ஸ்ரீ. C. R. சிவசுப்ரமண்யம், B. A., செக்ரெடரி.

# ‘சட்டசபையை நாம் எட்டியும் பாரோம்!’

## நமது இலட்சியம் இன்பத் திராவிடம்

## அடக்குமுறையால் நம்மை அழிக்கமுடியாது

## நியாயத்தின் மறுமுனையே நாம்

### காஞ்சி மாநாட்டுத் துவக்கவுரை

### ஆசைத்தம்பி முழக்கம்

“சட்டசபையை நாம் வெறுக்கிறோம். தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று ஆதிமுதல் கூறிவருகிறோம். ஆனால காமராஜர் போன்ற மேதாவிகள் நமது கூற்றைத் தப்பாகக் கருதிக்கொண்டு வீம்பு பேசுகின்றனர். நாம் கூறும் கொள்கை வெற்றி, சட்டசபைக்கு நாம செல்வதால் கிடைத்துவிட முடியாது. உதாரணமாக நாம் தேர்தலில் நின்று ஜெயித்தோம் என்றாலும் நமது சட்டசபையைக் கலைத்துவிடும்—இந்திய சர்க்கார். அதற்கான சட்டத்தைக் கையில் தயாராக வைத்திருக்கிறது” என்று செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டைத் துவக்கிவைத்த விருதுநகர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி முழக்கமிட்டார். அவர் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமாவது:

தமிழரசர்களின் சரித்திரத்திலே முக்கியத்துவம் பெற்ற இடம் காஞ்சிபுரம். தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி, வடநாட்டு கங்காணிகளின் முகாம் என்பதையும் — பார்ப்பன பாதந்தாங்கிகள் நிறைந்த இடம் என்பதையும் நிரூபித்த பெருமை காஞ்சிபுரத்திற்கு உரித்தானது. தமிழனுக்கு சுயமரியாதை உணர்வை ஊட்டிய இடம் காஞ்சிபுரம். 1926-ம் ஆண்டு இங்கு நடந்த காங்கிரஸ் மாநாட்டிலேதான் பெரியார் அவர்கள் காங்கிரசைக் கை கழுவினர்.

முதலாவது சுயமரியாதை மாநாடு இந்த மாவட்டத்திலேதான் நடந்தது. அது மாத்திரமல்ல—“திராவிடர்” என்ற வார்த்தையை நமக்கு வழங்கிய பெருமை காஞ்சியைத்தான் சேரும்!

### அஞ்சவில்லை—ஏன்?

இத்தகைய காஞ்சியிலே நாம் கூடியிருக்கிறோம். நெருக்கடி மிக்க நேரம். அளவில்லாத அடக்குமுறை. போலீஸ் கெடுபிடி; தடியடி; துப்பாக்கி பிரயோகம்—சிறைச்சாலை—இவைகளை நாம் அடிக்கடி காணவும், அனுபவிக்கவும் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்துவிட்ட நேரத்திலே நாம் கூடியிருக்கிறோம். இவைகளைக் கண்டு நாம் அஞ்சிவிடவில்லை. அயர்ந்துவிடவில்லை—ஏன்? அடக்குமுறையை நம்பி ஆட்சி நடத்துபவர்கள் வெள்ளைக்காரர்களைப் போல் பதவிகளை விட்டு விட்டு ஓடுவார்கள் என்று நமக்குத் தெரியும். அதோடு மட்டுமல்ல இங்கு நடப்பது குடியரசு அல்ல! தடி அரசு!

### மகத்தான சேவை

நமது திராவிட முன்னேற்ற கழகம் ஆரம்பமாகி பதினைந்து மாதங்கள்தான் ஆகின்றன. ஒரு கட்சிக்கு ஆயுதம் போன்ற தினசரி பத்திரிகை நம்மிடம் இல்லை. அப்படி இருந்தும் நாம் சாதித்த வேலைகள் பிரமிக்கத் தக்கவை.

சென்னை மாகாணத்தின் மூலை முடுக்கெல்லாம் நமது கழகக் கொடியை கம்பீரமாக பறக்கவிட்டிருக்கிறோம்' லட்சத்தை நாட்டும்படி அங்கத்தினர்கள். கிளைக் கழகங்கள்—மாநாடுகள்—எண்ணற்ற கூட்டங்கள் அத்தனையும் நாம் செய்த வேலைகள் நமது பிரசார புயலைக் கண்டு, அலைமோதும் துரும்பைப் போல சாதாரண ஆண்டியிலிருந்து அமைச்சர்கள் வரை நாள் தவறாமல் நம்மைத் திட்டிக்கொண்டிருக்கும் நடுக்கத்தை உண்டாக்கி இருக்கிறோம். சட்டசபையிலே நம்மைப் பற்றிக் சரமாரியான கேள்விகளை கண்டு விபரம் அறியா மந்திரிகள் குழப்பமான விளக்கந் தரும் சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம். நமது கருப்புக் கொடிகளை கண்டு வடநாட்டாரும் அவரது வால்பிடிப்போரும் கதி கலங்கும் நிலையை உண்டாக்கிவிட்டோம். சென்னையில் போலீஸாரின் குண்டாந்தடி வீச்சுக்கும்—குன்றத்தூர் குண்டுப் பிரயோகத்துக்கும் — மருண்டுவிடாமல் நின்று போரிட்டனர் வீரர்கள்! 144-வது பிரிவு 153-வது பிரிவு 71-பிரிவு நம்மை தாக்கின; சிறையைக் காட்டின; சிரித்துக்கொண்டே சிறை புகுந்தோம்; இவையெல்லாம் குறுகிய காலத்திலே நாம் செய்த மகத்தான சேவை.

### தியாக உணர்ச்சி

இவைகளை ஏன் செய்தோம்? ஐந்து ஏகர் நிலம் பெறவா? அல்லது மந்திரியாக வந்து சொந்தக்காரர்களுக்கும் நண்பர்களுக்கும் மக்கள் பணத்தை வாரியிறைத்து விரயம் செய்யவா? இந்தப் புத்திசாலித்தனம் காங்கிரசுக்கு வருமே தவிர நமக்கு வராது—பின் ஏன்? நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் திராவிட நாட்டின் விடுதலைக்கு செய்யும் தியாகமாகும்.

சென்னை மாகாணமாகிய திராவிடநாடு பார்ப்பனர்களிடமும் வடவர்களிடமும் அடிமைப்பட்டிருக்கும் வரை இங்கு ஒருபோதும் சமாதானம் ஏற்படப் போவதில்லை என்பதை ஆளவந்தார்க்கு அறிவிக்க ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல—திராவிடநாடு பிரியாமலிருக்கிறவரை ஆரியர்களுக்கு அபாயந்தான் சுதந்திர திராவிட நாட்டினால் அபாயமில்லை. பலவந்தமாக மத்திய சர்க்காரோடு இணைக்கப்பட்டிருக்கும் திராவிடநாடு, தன்னை நசுக்குகிறவனை துவேஷித்து, தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்வது இயற்கை. இதை எந்த சக்தியாலும் தடுத்துவிட முடியாது. பச்சையாக சொல்லப்போனால் திராவிடநாடு பிரித்த அன்றுதான் ஆரிய திராவிட பிரச்னை தீரும். அமைதியும் ஏற்படும்.

### பித்தம் தெளியும்

இன்றைய தினம் திராவிடநாடு தனியாக வேண்டும் என்று சொல்லாதவர்கள் ஆரியர்களும் அவர்கள் அடிவருடிகளுந்தான். அவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் திராவிடர்களின் நிலையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள், முதலில் திராவிடம் ஒரு தனி நாடு என்பதை அறிந்துகொள்ள வேண்டும் — இந்த ஆற்றல் காங்கிரஸ்காரர்களுக்குக் கிடையாது. அவர்கள் அரசியல் தெரியாத அடபாவிகள்! கண்டத்திற்கும் நாட்டிற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள். காலம் கடந்துதான் அவர்களுக்கு தெளிவு ஏற்படும். 1926ல் வகுப்புவாரி பிரதிநிதித்வ திட்டத்தை காங்கிரஸ் ஆதரிக்கவில்லை, ஆனால் இன்று அதை ஆதரித்து சுப்ரீம் கோர்ட்வரை செல்லவும் முடிந்தால் சட்டத்தை திருத்தவும் காங்கிரஸ்காரர்களுக்கு “ஞானோதயம்” பிறந்திருக்கிறது. இதைப்போலவே திராவிடநாட்டுப் பிரிவினையையும் போகப் போகப் புரிந்துகொள்வார்கள்.

### வெறுப்பு ஆரம்பம்

அதுவரைக்கும் நாம் காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. பொதுவாக எந்நாட்டார் அல்லது வர்க்கத்தார் ஒரு இனத்தின் சுதந்திரத்தையும் உரிமையையும் உதறித்தள்ளுகிறார்களோ அவர்களைத் தனிப்பட்டவர்களும் கூட்டத்தார்களும் உதறித்தள்ளுவது நிச்சயம். இது உலக வரலாறு உரைக்கும் நீதி.

இதற்கு விதிவிலக்கானவர்களல்ல காங்கிரஸ்காரர்கள். திராவிடஇன உரிமையையும் சுதந்திரத்தையும் வடவர்களும் காங்கிரஸ்காரர்களும் உதறித்தள்ளுகிறார்கள். இன்று அவர்களை தனிப்பட்டவர்களும் கூட்டத்தார்களும் வெறுக்க ஆரம்பித்துவிட்டதைக் காண்கிறோம்.

### காமராஜர் தயாரா?

காங்கிரஸ்கட்சி ஒழிந்துவிடுமோ என்ற பீதியில்தான் நமதுகழகத்தை ஒழித்துக்கட்ட காங்கிரஸ் முயல்றேது. காமராஜரும் அவரது கையாட்களும் எந்த இடத்திற்குச் சென்றாலும் ‘முகாரி’ பாடுகின்றனர். திராவிட இயக்கத்திற்கு தைரியமிருந்தால் தேர்தலில் நிற்கட்டும் என்று காமராஜர் சவால் விடுகிறார். நான் அவருக்கு கூறுகிறேன் தேர்தலுக்கு நிற்கத்தயார். எந்த தேர்தலுக்கு? இன்று பிரகாசம் தீர்மானத்தால் சந்தி சிரிக்கிறதே சட்டசபை அந்த தேர்தலுக்கு அல்ல, திராவிடநாடு வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினைமீது தைரியமிருந்தால்தேர்தலுக்கு ஏற்பாடு செய்யட்டும். போட்டிபோட தயாராயிருக்கிறோம் காமராஜர் பதில் சொல்வாரா?

காமராஜரும், காங்கிரஸ் அரசாங்கமும் ஆரியம ஆட்டும் கைப்பாவைகள் ஆரியம் அழிய அவர்கள் நிச்சயம் மாறிவிடுவார்கள் எனவே அவர்களைப்பற்றியும் நமக்கு கவலையில்லை.

### வடவர்போக்கு

ஆனால் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். காமராஜர் பெரிதெனக் கருதுகிற சட்டசபையை திராவிட இயக்கம் கைப்பற்றிவிட்டால் மறுதினமே மத்திய சர்க்காரால் சட்டசபை கலைக்கப்படும்.

### மத்திய சர்க்கார்

மத்திய சர்க்கார் ஒரேயடியாக ஒழியவேண்டும் என்று நாம்சொல்லவில்லை. பிரிட்டிஷ் காமன்வெல்த்தை போல—ஐக்கிய நாடுகள் சபையைப் போல மத்தியசர்க்கார் இருப்பதிலே நமக்கு ஆட்சேபனை இல்லை. அப்படிப்பட்ட நிலையில் மத்திய சர்க்காரோடு திராவிடநாடு பூரணசுயாட்சி பெற்று இருக்கலாம். ஆனால் ஒரு செல்லாக்காசுகூட இங்கிருந்து வரியாகச்செல்ல அனுமதிக்கமாட்டோம். இந்த நியாயமான உரிமையை எந்த சக்தியும் அழித்துவிடாது வெற்றி நிச்சயம் உண்டு.

### நமது வேலை

எனவே நமது ஒரேவேலை நம்இயக்கத்தை மென்மேலும் பலப்படுத்த வேண்டும் அங்கத்தினர்கள் சேர்ப்பது, புதிய கழகங்கள் திறப்பது — பிரசாரத்தை விடாமல் செய்வது ஆகியவைகளை தொடர்ந்து செய்ய வேண்டும். சரியான கட்டுப்பாடு — அமைப்புமுறை —பாதை காட்ட பத்திரிகை ஏற்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இம்மாநாட்டைத் துவக்கிவைக்கிறேன்.

—X—


கருத்துநிறை கலைவிழா!

திருவாரூர் திராவிட முன்னேற்றக் கழக (கிளை)

கட்டிட நிதிக்காக

7—1—51 ஞாயிறு

திருவாரூரில்

★

கலைவாணர் திரு.

என். எஸ். கிருஷ்ணன் அவர்களின்

“உத்தமர் காந்தி வரலாறு”

வில்லுப்பாட்டு

‘கிந்தனார்’ கதா காலட்சேபம்

நடைபெறும்

—கட்டிட நிதிக் குழு, ஆரூர்.

A.

# சமூக உரிமை நீதி மாநாடு

ஜனவரி மாதத்தில் ⁘ மதுரை மாவட்டம் பெரியகுளத்தில்

**தமிழகத்தின் பல அரசியல் அறிஞர்களும் பங்கு கொள்வர்**

'காண்டீபம்' ஆசிரியர் எஸ். எஸ். மாரிசாமி, 'பிரசண்ட விகடன்' ஆசிரியர் நாராணதுரைக்கண்ணன், 'காதல்' ஆசிரியர் அரு. ராமநாதன், முதலிய பல எழுத்துச் சிற்பிகளும் அழைக்கப் பட்டிருக்கின்றனர்.

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி, முதலிய நடிப்புலக நல்லறிவாளர்களும் பங்கேற்பர்.

தமிழ் நாட்டின் பல்வேறு நகரசபைத் தலைவர்களும் கலந்து கொள்வர்.

**தமிழகத்தின் விழிப்புணர்ச்சியின் சின்னமே இம்மாநாடு.**

இளமுருகு; வரவேற்புக்குழு செயலாளர்.

• 8-ம் பக்கத் தொடர்ச்சி

மெல்லாம் கடுமையான வெய்யிலில் காட்டில் கட்டை வெட்டுகின்றனர். அருமையாக ஈன்றெடுத்த குழந்தைகளைத் தாய்மார்கள் பகிரங்கமாக விலை கூறி விற்கின்றனர். காங்கிரஸ் தலைவர்களிலேயே சிலர் அந்தக் குழந்தைகளை விலைக்கு வாங்கி இருக்கின்றனர்.

இந்தக் கொடுமைகள் மாற நமக்குள்ள ஒரே வழி பிரித்துக்கொள்வதுதான் என்றால் பாகிஸ்தானிடம் பணம் வாங்கிக்கொண்டு திராவிடஸ்தான் கிளர்ச்சியைத் தொடங்கி இருக்கின்றார்கள் என்று உளறிக் கொட்டுகிறது ஒரு கும்பல்.

அப்படியானால், நாமும் சுலபமாகச் சொல்லிவிடலாம். பார்ப்பனரிடமும், பண்டார சன்னதிகளிடமும் கூலி வாங்கிக்கொண்டு பிதற்றுகின்றன இந்த மாமிச பிண்டங்கள் என்று. திராவிடஸ்தான் எப்போது கேட்கப்பட்டது என்ற அரிச்சுவடியே அறியாத அப்பாவிகளிடம் நாம் விவாதிப்பது வீண் வேலை. நமக்கு சட்ட உரிமை வேண்டும். அந்த சட்டத்தில் மனித ஜீவாதாரமான உரிமைகள் அடங்கியிருக்க வேண்டும்.

**சட்டம்.**

சட்டம் அதற்கு இடங்கொடுக்கவில்லையானால் மாற்றி எழுது. இமயமலைபோல் அசைக்க முடியாதிருக்க. கூட்ட, குறைக்க, தீட்ட, திருத்த, துண்டிக்க, துணை சேர்க்க மக்களுக்கு உரிமையுண்டு; மக்களுக்காகத்தான் சட்டமே தவிர சட்டத்திற்காக மக்களல்ல.

இன்றைய நிலையில், அரசாங்கம் செய்கின்ற அக்கிரமங்களை மறைக்கும் திரையாகத் தொங்குவதுதான் சட்டமாக இருக்கிறது. அதை அழுக்குப் படியாமல் அன்றாடம் வெளுத்துக் கொடுப்பவர்கள்தான் அல்லாடி போன்றோர்கள். அந்த அழுக்கு மூட்டைகளை சுமந்து செல்லுபவைதான், பிறவிபேதம், புராணம், மதம், சடங்கு சம்பிரதாயம், தலைவிதி, கருமம் என்ற (கழுதைகள்) அல்லது வண்ணான் வீட்டு வாகனங்கள்.

அவைகளைத் திருத்தி செம்மைப் படுத்தினாலன்றி நாட்டில் அமைதி நிலவுமென்பது குதிரைக் கொம்பாகும்.

**பொய் சொன்ன சர்க்கார்.**

எந்த அரசாங்கமும் பொய் சொல்லத் துணியாத அளவுக்கு நமது சர்க்கார் பொய் சொல்லவும் துணிந்துவிட்டது பஞ்சாப் படுகொலை நடத்திய ஜெனரல் டயரும், காந்தியாரைக் கொன்ற கொலைகார கோட்சே ஆகியவர்கள் கூட நீதிமன்றத்தில் உண்மையை ஒப்புக்கொண்டார்கள். ஆனால் நமது அரசாங்கம் மேல்நாட்டிலிருந்த பொய்யர் சங்கத்தையே வெட்கித்தலைகுனியவைத்திருக்கிறது.

நமது தோழர் ஆசைத்தம்பி அவர்களுடைய முடியை திருச்சி மத்திய சிறை சூவாரண்டனில் 22—7—50ல் சிறைத்துத் தள்ளி, 22—11—50ல், நாங்கள் அப்படிச் செய்யவில்லை என்று சர்க்கார் சொல்லுகிறது. அவர் மொட்டை அடித்த தலையுடன் வெளியே வந்தார்! அவரை அந்தக் கோலத்திலேயே புகைப்படம் பிடித்து திராவிட நாடு இதழில் வெளியிட்டிருந்தது உங்களுக்கு நன்றாக நினைவிருக்கும். ஆனால், அந்தச் சம்பவம் நான்கு திங்களுக்குப் பிறகு, ஒரு திங்களில் ஒரு அங்குலம் வளரலாம் என்று கணக்கு வைத்து 4 திங்களுக்கு 4 அங்குலம் வளர்ந்து அவர் ஒழுங்காக கிராப்பு சீவி விட்டுக் கொண்டதை C. I. Dக்கள் மூலம் தெரிந்துக்கொண்ட பிறகு 'நாங்கள் மொட்டையடிக்கவில்லை', என்று தைரியமாக மார் தட்டி சொல்ல முன் வந்திருக்கிற சர்க்காரின் வீர தீரப் பராக்ரமத்தைப் பாருங்கள். அதன் விவேகமற்ற செய்கையையும், வீணான ராஜதந்திரத்தையும் கண்டு நாம் எள்ளி நகையாடுகிறோம்! வெட்கம்', என்று கேட்போரை சொல்லத் தூண்டும். உதட்டின் ஓரம் வரையில் சிரிக்கிறான் உண்மையும் நேர்மையுமுள்ள காங்கிரஸ் தொண்டன்.

**அஞ்சப்போவதில்லை**

ஆனால், இதற்கெல்லாம் நாம் அஞ்சப் போவதில்லை. ஏனெனில் தேர்தல் நெருங்க நெருங்க, நமது கூட்டங்களுக்கு ஆட்கள் அதிகமாகச் சேரச் சேர, நமது நூல்கள் கடைகளில் விற்பனை ஆக ஆக, நமது கதைகள் காட்சிகளில் அதிக நாட்கள் ஓட— ஓட, அவர்கள் ஆத்திரம் அதிகமாய், அதுவே வெறியாக மாறி, நம் போன்ற தொண்டர்களை சிறையிலே தள்ளி சாகடித்து, 'எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னாலும் சொல்வர்! அந்த மந்த மதியில், விளக்கமில்லாத முறையில், தெளிவில்லாத போக்கில் கேலியும் கிண்டலுமே மேடைப் பேச்சு. மலபார் போலீஸ் ஒன்றுதான் மணிமுடி தரும் மக்கள் கூட்டம் என்று நினைத்துக்கொண்டு, மலபார் போலீசையே நம்பிப் போய்க்கொண்டிருக்கின்றது இன்றைய ஜனநாயக சர்க்கார். தாராளமாக செய்யட்டும், ஆனால், அதன் காரணமாக இங்குள்ள மலையாளிகளை மக்கள் வெறுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் எவ்வகையிலும், திராவிட முன்னேற்றக் கழகம் உத்தரவாதமாக முடியாது என்பதை சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கின்றோம்.

**நேர்மைக்கு வெகுதூரம்**

ஒரு பொறுப்பான அரசியல் கட்சி, அதுவும் சர்க்காரை நடத்தும் கட்சி, மற்ற அரசியல், சமுதாயக் கட்சிகளோடு நடந்துகொள்ளவேண்டிய மரியாதை முறையிலிருந்து வெகுதூரம் ஒதுங்கிப் போய்விட்டது, என்பதற்கு எடுத்துக்காட்டு தோழர் என். வி. நடராசனை சிறையிலிருந்து நீதி மன்றத்திற்கு கையில் விலங்கிட்டு அழைத்துச் சென்ற ஒரு நிகழ்ச்சியே போதுமென்று நினைக்கின்றேன். உடல் மெலிந்த தோழர் நடராசனுக்கே விலங்கிட வேண்டிய நிலை ஏற்பட்டால், இன்னும் கொஞ்சம் உடல் வன்மை பெற்ற பெத்தாம்பாளையம் பழனிச்சாமி போன்றவர்களை வெளியே அழைத்து வருவார்களோ, அல்லது நீதி மன்றத்தையே சிறையில தள்ளி விசாரிக்கச் செய்வார்களோ என்னவோ தெரியாது.

இவைகளுக்கெல்லாம் ஏதாவது சப்பைக் காரணங்களைக் காட்டி, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் மொட்டையடித்தல், விலங்கிடல்முதலானவைகளைச் செய்ய முடிகிறதே தவிர, சட்ட ரீதியான காரணங்களை அவர்களால இதுவரைக் காட்ட முடியவில்லை. சாக்குவைத்துப் பேசுவது சர்க்கார் செய்யவேண்டிய கௌரவக் காரியமல்ல, சந்தியில் நிற்கும் காத்தாயி செய்யவேண்டிய கேவல வேலை.

**நமது கடமை**

எது எப்படியிருந்தாலும், நம்முன் நிற்கும் வேலைகள் வானுயர இருக்கின்றன. கடமைக் காலக் கருவியை நோக்கி நிற்கின்றது. நடக்கவேண்டிய பாதை வெகுதூரம். இதற்கு முன் நமக்கிருந்த எதிரிகள், மதவாதிகளும், பணக்காரர்கள் மட்டிலுந்தான். ஆனால் இப்போது பலமான சர்க்கார், பாராளுமன்றம், டில்லி, வடவர், வாணிபவல்லூறுகள், மதம், புராணம், சாத்திரம், இதிகாசம் ஆகிய அவ்வளவு கடுப்புயலை, கடப்பாறையை, கடுமையான பனியை கார்மேகங்களை, கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப்பாதையைக் கடக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அந்தவழியும் நமக்கு இருளாகத் தெரியாமல் சுடர்போல இருக்க வேண்டிய ஆயுதம் செய்தித்தாள். தன்னலங்கருதாதபொதுத்தொண்டு சலியாத உழைப்பு, ஆகியவைகள் அதற்கடுத்த படியாதும். தலை நகரில் என்ன நடந்தது என்பதை தலைமன்னாரில் தெரிந்துகொள்ள ஒருவாரம் பிடிக்கிறது. மிக மிகப் பரிதாபத்துக்குரிய செய்தியாகும். இப்பக்கவேலைகள் எவைத் தடைப்பட்டாலும், முதன்முதல் தினபத்திரிகைத் தொடங்காமல் தீவிரமேயலையில் ஈடுபட்டுப் பெறுகிற வெற்றி காட்டில் காய்ந்த நிலவாக, நிலைக்துவராத செய்தியாக, கூர்மழுங்கிய வாளாகப் போய்விடுகிறது,

ஆகவே நமது அண்ணாவும், பொதுச்செயலாளருமான தோழர் அண்ணாதுரை அவர்களை தினபத்திரிகையை வெளியே கொண்டுவர எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியைத் தீவிரப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாநாடுகள்**

இதைபோன்ற மாநாடுகள் கூட்டுவதன் நோக்கம். மாவட்டத்தில் உள்ள பல தோழர்கள் ஒன்றாகக் கூடி, அவரவர்கள் பகுதியிலே செய்த வேலைகளையும், சேர்த்திருக்கின்ற உறுப்பினர் தொகைகளையும், நடந்த கூட்டங்களையும், பேசிய கருத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதற்கும், நமது இயக்கத்தின் செல்வாக்கை சர்க்காருக்கு எடுத்துக் காட்டவும் ஒரு கருவியாக அமையும் என்பதினாலேதான்.

இன்னும் நமது ஆசை, நமது இயக்கம் ஒரு சர்க்காரைப்போல இயங்கவேண்டும். ஆனால். நமது சர்க்காரைப்போலல்ல. பிரிட்டிஷ் பாராளுமன்றம்போல. ஏனெனில், அந்த சட்டசபையில்தான் யாரும் உறங்கமாட்டார்கள். நேரங்கழித்து வரமாட்டார்கள். தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசமாட்டார்கள். அந்த முறையில் நமது கழகத்தை மாகாண மாநாட்டின் பிறகாவது அமைக்க நீங்கள் பெருதவியளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

—

## டில்லி மந்திரி மஹ்தாப்

இந்திய சர்க்காரில் கைத்தொழில் சப்ளை மந்திரியாக இருக்கும் ஹரி கிருஷ்ண மஹ்தாப் டிசம்பர் 30-ந் தேதி சென்னைக்கு வந்து சேருகிறார்.

டிச. 31ந் தேதியும் ஜனவரி 1ந் தேதியும் சென்னையிலிருப்பார்.

சென்னையில் (மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி) தொழிற் பயிற்சிக் கழகத்திற்குச் செல்லவிருக்கிறார்.

மகாபலிபுரத்துக்கும் செல்வதாகத் தெரிகிறது. ஜனவரி 2-ந் தேதி சென்னையிலிருந்து திருச்சி செல்லுகிறார். அங்கிருந்து மதுரைக்குப் போகிறார்.

ஜனவரி 3-ந் தேதி திருவனந்தபுரம். 4-ந் தேதி கோட்டயம். ஜன. 5-ல் ஆலப்புழை: ஜனவரி 6-ந் தேதி கோயம்புத்தூர் தென் இந்திய முதலாளிகள் சங்கத்தினரைச் சந்திப்பார்.

குறிப்பிட்ட இடத்தில் நமது அதிருப்தியை கருப்புக் கொடிகள் மூலம் காட்டவேண்டும். முன்பே வருவதாகச் சொல்லி கடைசி நேரத்தில், வராமற்போன டில்லி மந்திரிகளில் மஹ்தாபும் ஒருவர்.

எனவே, நமது வீரத்தைக் காட்டுவோம்!

நாடெங்கும் கருப்புக்கொடி பிடிப்போம்!

## திருத்தம்

இந்த இதழ் 4-ம் பக்கம். 3-வது கலம் 41-வது வரியில் 'டிசம்பர் 3-ந் தேதி' என்றிருப்பதை 'ஜனவரி 3-ந் தேதி' என்று திருத்திக் கொள்க.

(ஆ—ர்)

பொங்கல் புதுநாளன்று
**'திராவிடத் தென்றல்'**
புதுமை வீசப் புறப்படுகிறது!
திங்கள் தோறும் 40 பக்கங்களுடன் சிறந்த முறையில் வெளிவரும்.
**விலை 2 அணாதான்**
விற்பனையாளர் தேவை!
விவரங்கட்கு:—
"திராவிடத் தென்றல்"
ஆராய்ச்சிப் பதிப்பகம்
(Ad) பொள்ளாச்சி S I.

# "தெய்வீக மூலிகை"யின் தெகிடுதத்தம்!

## தெருவெல்லாம் பிணங்கள்!

## பித்தலாட்டத்தின் முடிவு

## சதிகாரச் சண்டாளர்கள்!

பிணங்கள்!

சாலையோரங்களில், ரயில்வே நிலையங்களில், பஸ் நிலையங்களில், எங்கு பார்த்தாலும் பிணக்குவியல்!

பத்து மைல் தொலைவிற்கு, சாலைகளின் பக்கமாகச் செல்லவே முடியவில்லை—கோரமான காட்சி!

மூன்று நாட்களில் 500 பேர் செத்தனர். ஆண், பெண், குழந்தை, எல்லோரும் சுருண்டு சுருண்டு வீழ்கின்றனர்.

காணச் சகிக்கவில்லை — எங்கு பார்த்தாலும் பிணம், எப்பக்கம் திரும்பினும் பிணக்காடு!

நேற்று உயிரோடு உலவியவன், காலையிலே 'அங்கு போகிறேன்' என்று கூறிவிட்டுச் சென்றவன், மாலையில் வந்துவிடுகிறேன் என்று ரயிலேறியவன் எவரும் திரும்பவில்லை. பிணமாகிக் கொண்டேயிருக்கிறார்கள்!

ரயிலடிக்கு வந்தால் இரவு குளிர் தாங்காது ஒண்டிப் படுத்தவன் உயிரற்ற சடலமாகிறான்! உட்கார்ந்தபடியே பலர் செத்துச் சுருள்கின்றனர்! ஓடிவருவோர் தடுமாறி, நடுவீதியிலேயே செத்து மடிகின்றனர்!

சிறு கிராமம்—காட்சி காணச் சகிக்கவில்லை!

மாகாண சர்க்கார் கலங்குகிறது; திண்டாடுகிறது.

மாகாண முதலமைச்சர், சம்பவம் நடக்கும் இடம் நோக்கி விரைந்திருக்கிறார். பிணக் குவியல்களை, உடனுக்குடன் அப்புறப்படுத்த, சர்க்கார் விசேஷ ஏற்பாடுகளைச் செய்து கொண்டுள்ளனர்.

விசேஷ மாஜிஸ்திரேட்டுகள், போலீஸ் அதிகாரிகளெல்லாம் 'அந்த இடத்திலே' கொண்டுபோய் வைக்கப் பட்டிருக்கின்றனர்.

வெளியிலிருந்து யாரும் அந்த இடத்திற்கு வரக் கூடாதென 144 போடப்பட்டுவிட்டது.

அங்கு, எவரையும் வராமல் தடுக்கும்படி, மேற்கு வங்கம், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், சென்னை முதலாய பல மாகாண சர்க்கார்களுக்கும் வேண்டுகோள்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

பிரத்தியேக ரயில்கள் ஏராளமாக, அந்த குக்கிராமத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இருந்தும், அங்கு கூடிக் கிடக்கும் பல்லாயிரக் கணக்கான மக்களை அப்புறப்படுத்த முடியவில்லை.

இன்னும் 50,000-க்கு மேற்பட்ட ஜனத்திரள் அங்கு தேங்கிக் கிடக்கிறது.

மக்களை, அங்கு வராமல் தடுக்கும்படி பத்திரிகைகளையெல்லாம் சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

சர்க்கார் தங்களாலான பிரத்தியேக் ஏற்பாடுகளையெல்லாம் செய்தும்—முடியவில்லை! இயலவில்லை!!

ஒரே கவலையாயிருக்கிறது — மாகாண சர்க்காருக்குப் பெரிய தலைவேதனையாகிவிட்டது.

★

நெஞ்சைக் குலுக்கும், இச்சோகக் காட்சி நமது கற்பனையல்ல. உண்மையாகவே நடப்பது. வேறு எங்குமல்ல; ஒரிசா மாகாணத்தில்.

ஒரிசா மாகாணத்தில் ரந்தாளி என்ற குக்கிராமத்தில் நடக்கும் கோலாகலம் சம்பந்தமாக, பத்திரிகை நிருபர்கள், கண்டு வந்து தந்துள்ள விபரம்தான் மேலே தந்திருப்பது.

ஒரிசாவில் நடைபெறும் மேற்படி கோரக் காட்சியைப் பற்றிய செய்திகளைக் காணும்போது நமது இதயம் கலங்குகிறது. பசிக் கொடுமையால் பலர் மாள்கின்றனர்—பஞ்சத்தால் மனிதர்கள் சுருண்டு சாகின்றனர், என்பதையே நாம் கண்டிருக்கிறோம்—கேட்டிருக்கிறோம்!

ரந்தாளி கிராமத்தில் நடக்கும் கோரச் சம்பவம் பசிக்கொடுமையால் அல்ல. பஞ்ச நிலைமையால் அல்ல.

துப்பாக்கிக் குண்டுகளால் அல்ல, மனிதர்கள் அங்கே பிணமாக்கிக் கொண்டேயிருப்பது,

மூடநம்பிக்கையால்!

ஆமாம்—ஒரிசா சர்க்காரே, வேதனையோடு, இப்போது வெளியிட்டிருக்கிறது. 'மூடநம்பிக்கைவெறியால் பல்லாயிரக்கணக்கில் நந்தாளி குக்கிராமத்தில் கூடினர் மக்கள். சுகாதாரவசதி சீர்கெட்டதால், காலரா ஏற்பட்டுவிட்டது. அதன் கொடுமையால் மக்கள், புழுக்கள்போல செத்துக்கொண்டேயிருக்கின்றனர். அவர்களை அந்த கிராமத்திலிருந்து வெளியேற்ற நாங்கள் படாதபாடு படுகிறோம்" என்று வேதனையோடு வெளியிட்டிருக்கின்றனர்.

மூடநம்பிக்கை — சர்க்கார் கூறுகிறது.

மக்களிடையே ஏற்பட்ட மூடநம்பிக்கையால், பலர் செத்துவீழ்கின்றனர்—சர்க்கார் சொல்கிறது.

வேதனையான காட்சி, சகிக்க முடியவில்லை — சர்க்கார் அறிவிக்கிறது.

✻

அற்புத மூலிகை.<br>
தெய்வீக மருந்து.<br>
மாட்டுக்காரபையன் உருவில் 'கடவுள்!'<br>
12-வயது சிறுவனின் சித்து விளையாடல்கள்.<br>
தீராத பிணியெல்லாம் தீருகிறது.<br>
ஆறாத நோயெல்லாம் சிறுமூலிகையால், ஓடுகிறது.<br>
அதிசயம்! அதிசயம்!!<br>
நேபாளபாபாவின் அதிசயம்!

என்றெல்லாம் நமது பத்திரிகைகள், பிரமாதப்படுத்திய நிகழ்ச்சியைத்தான், சர்க்கார் 'மூடநம்பிக்கையின் விளைவு' என்று கஷ்டந்தாங்கமாட்டாது என்பதாக வேதனையோடு வெளியிட்டிருக்கிறது.

நேப்பாளபாபா-என்ற 12-வயதுச் சிறுவன், சிறுமூலிகையைத் தருவதாகவும், அது தீராத வியாதிகளையெல்லாம் தீர்ப்பதாகவும், அதனால் அச்சிறுவன் தங்கியிருந்த ரந்தாளி கிராமம் நோக்கி இந்தியா முழுமையிலிருந்தும் மக்கள் யாத்திரை சென்றுகொண்டிருப்பதாகவும், தேசிய இதழ்கள், பிரமாதப்படுத்திய செய்தியை மக்கள் அறிவர்.

தேசிய இதழ்களிலும், பார்ப்பனியப்பித்தலாட்டத்தை வளர்க்கும் 'திருக்கும்பல்' மேற்படி செய்திகளை பலவிதமாக, பலவிதத் தலைப்புகளுடன் பிரசுரித்து வந்தன.

"கலிகாலக் கடவுளின் திரு அவதாரம்!"–தீட்டியது, ஒருபத்திரிகை.

"கடவுள், அச்சிறுவனிடம் வந்து ஐக்கியமாகியிருக்கிறார்"— ஒருநாள், இப்படி எழுதின.

"பல்லாயிரக்கணக்கான மக்கள் நேபாளபாபாவைத் தரிசிக்கச் செல்லுகின்றனர்- ஆகவே புது ரயில்களையும், விசேஷப் போக்குவரத்துகளையும் சர்க்கார் விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது" — இன்னொருநாள், இப்படி ஒரு செய்தியைப் பிரசுரித்தன.

ஏதோ ஒரு புதிய அதிசயம் நடப்பதுபோல, மக்களிடையே பரபரப்பைக்கிளப்பும் வகையில் மேற்படி செய்தி, புதுப்புது முறைகளில் பிரசுரமாயிற்று.

அறிவுள்ளோரைக்கூட குழப்பும் வகையில், அவ்வளவு விளம்பரபடுத்தின, ரந்தாளி கிராமத்து நேப்பாளபாபாவைப்பற்றி.

கொட்டை எழுத்துக்களில் மேற்படி செய்திகள் பிரசுரமாயின! ஒவ்வொரு இதழும் ஒவ்வொரு முறையில் தீட்டிற்று! 'ஆனந்தவிகடன்' போன்றவை, 'தினமணி'போல பிரமாதமாகப் புகழ்ந்து எழுதாவிட்டாலும், ஹாஸ்யப்பிரச்சினையாக்கினதுதே தவிர, கண்டிக்க முன்வரவில்லை!

பத்திரிகைச் செய்திகள் எல்லோரையும் ஒருகலக்கு கலக்கிவிட்டன, ஒரிசா மாகாணச் சர்க்காரோ, நேபாளபாபாபற்றி,விசேஷஅக்கரை எடுக்க வேண்டியதாயிற்று.

பத்திரிகைகள் பரப்பிய செய்திகளாலும் மக்களிடையே ஏற்பட்ட பரபரப்பாலும் ஒரிசா சர்க்கார், பாபாவின் அற்புத மூலிகை பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியை நியமித்தது.

பல விஞ்ஞான நிபுணர்களின் ஆலோசனையைக்கூட நாடவேண்டிய அளவுக்கு மேற்படி விஷயம், ஒரிசா சர்க்காரைக் கொண்டுவிட்டது.

இந்திய விஞ்ஞானி சர் ஸி. வி. ராமன், "விஞ்ஞான ரீதிக்கு இது போன்ற விஷயங்கள் ஒத்துவராது. இதையெல்லாம் நம்பமுடியாது" என்று, தமது கருத்தை முதன் முதலில் வெளியிட்டார்.

பிறகு சர்க்கார் நியமித்தகமிட்டி, ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின் 'அற்புத மூலிகை ஒரு பித்தலாட்டம்' என்று, தனது கருத்தைத் தந்தது.

பணம் திரட்ட ஒரு சில சுயநலவாதிகள் செய்த சதி—இது. தங்களுக்கு நிறைய வருமானம் கிடைக்கும்—என்பதற்காகப் பல் சொந்தக்காரர்கள் பரப்பிய விஷமச் செயல்.

இந்தப் பித்தலாட்டக் கும்பல், தங்கள் ஏஜண்டுகள் மூலம், பிற மாகாணங்களிலும் மேற்படி விஷயத்தைச் சாமர்த்தியமான முறையில் பரப்பியிருக்கின்றனர்.

இந்த சம்பவத்தால் சுமார் ஐந்து லட்சம் மக்களுக்குமேல் பாதிக்கப் பட்டிருக்கின்றனர்.

இந்த விஷயம் ஒரு பெரிய வைத்தியக்காரத்தனம்.

—என்று, கமிட்டியின் அறிக்கைக்குப் பின் ஒரிசா சர்க்கார், வெளியிட்டிருக்கிறது.

அதோடு, மேற்படி மருந்தை விற்கக் கூடாதெனவும் நேபாள பாபாவுக்கு 144 தடையுத்திரவு போட்டிருக்கிறது.

சாதாரண நோயைக் கூட மேற்படி தெய்வீக மூலிகைத் தீர்க்கவில்லையாம்!

நோயைத் தீர்க்காதது மட்டுமின்றி, தினசரி மக்கள் செத்துப் பிணமாகும் அளவுக்கு நிலைமை மோசமாயிருக்கிறது.

ஒரு சர்க்காரே அலறும்படியான நிலை! தவித்துத் துடிக்கும்படியான சம்பவம்!!

எவ்வளவு வேதனை, எத்துணை மோசம்—என்பதை நினைத்தால், அறிவுள்ளோர் பதட்டமடையாமலிரார்.

நேபாள பாபாவின் செயல் 'வைத்தியக்காரத்தனம்' என்று சர்க்கார் அறிக்கைவிட்ட பின், நமது பித்தலாட்ட பார்ப்பனீய தேசிய இதழ்கள், இந்தச் சம்பவங்களையும் பெரிதாகவே போட்டு வருகின்றன.

அற்ப புத்தி—ஒரு சமுதாயத்தில் உலவும் பத்திரிகைகளுக்கு.

அதிசயம்—என்று பிரமாதமாகப் பிரசுரித்ததும், இவைதான்.

அக்கிரமம் — என்று இப்போது, செய்திகளை வெளியிடுவதும் அவைதான்.

'அதிசயம்' என்று கூறி, ஒருவாரமும் 'அற்புதம்' என்று சொல்லி இன்னொரு வாரமும், பத்திரிகையை அதிகம் விற்கலாம் என்ற அற்ப நினைவு அன்றி வேறு எதைக்கூற முடியும் இந்த அர்த்தநாரிகளை பரம்பரையின் புத்தியைக் காணும்போது!

நேபாள பாபாவைப் பற்றி புதுப் புதுக் கதைகளைக் கிளப்பிவிட்ட இந்தப் "பொய்க் கூட்டம்" இப்போது, அதே அளவில் அந்த பித்தலாட்டங்களையும் பிரசுரிக்கின்றன.

என்னவென்று கூறமுடியும், இந்த 'இரட்டை நாக்கு' படைத்த, திருக்கூட்டத்தை?

மூட நம்பிக்கை நிரம்பிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டு, பின் மூக்கறுபடும் கட்டம் வந்ததும், முற்றன்னுக்களாக மாறுகின்றனர்!

வைதீகம், மூடநம்பிக்கை வளர்க்கும் இந்தச் சனாதனச் சவுண்டிகளின் போக்கால் விளைந்த கோரம்? கொடுமை!! ஐயோ — நினைத்தாலே நெஞ்சம் கொதிக்கிறது.

மக்கள் செத்து மடிகின்றனராம்? புழுக்களைப் போல வீதிகளிலே கிடக்கின்றனராம்!

குருட்டு நம்பிக்கை நிரம்பிய, 'அற்புதத்தைப் பற்றி மக்களைக் குழப்பிவிட்ட பத்திரிகைகளின், செயலைக் கண்டிப்பதோடு நின்றுவிட்டால் மட்டும் போதாது.

இதுபோன்ற மூடநம்பிக்கை செய்திகளைப் பரப்பும்பத்திரிகைகளை கண்டிமேற்றவேண்டும், இன்றேல் இந்தப்பித்துவிளையாட்டு ஒழியாது.

எதையாவது பரப்பி, வாழ நினைக்கும் செயலை, சமுதாயத்தைக் கோரக் களத்துக்கே கொண்டு செல்லும். இது வளருவது கூடாது; அனுமதிப்பதும், ஆகாது. தகாது.

———

★ நாஞ்சில் மாவட்ட ★

# திராவிட முன்னேற்றக் கழக

# முதல் மாநாடு

இடம்:- கிருஷ்ணன் கோவில் தியாகராயர் பந்தல்

(ஆங்கிலப் பாடசாலை சமீபம்)

டிசம்பர் 29, 30, (வெள்ளி, சனி) நாட்களில்

தலைவர்: **இரெ. இளம்வழுதி** எம். ஏ; பி. எல்.,

துவக்குபவர்: **என். எஸ். இளங்கோ**

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, M A., L T., இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஈ. வெ. கே. சம்பத் ஈ. வெ. அ. வள்ளிமுத்து, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் மற்றும் பல இயக்கத் தோழர்களும் பங்குகொள்வர்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் நாடகங்கள்

**"நீதிதேவன் மயக்கம்"** வெள்ளி இரவு

**"சந்திரமோகன்"** சனி இரவு

பொதுச்செயலாளர்,
**அ. இராமசாமி,**
பொருளாளர்,
**அ. குமாரவேலு**

செயலாளர்கள்,
**சு. வன்னியப்பெருமாள், பி. ஆறுமுகம்.**
தொண்டர்படைத் தளபதிகள்,
**எம். அந்தோனி, பி. இராமச்சந்திரன்,**
**எஸ். நடராஜன்.**

வரவேற்பு கமிட்டி தலைவர்,
**வி. எம். ஜான்,**
விளம்பர உறுப்பினர்கள்,
**கி. மனோகரன்,**
**வை. சுப்பிரமணியன்,**
**எஸ். சுப்பிரமணியன்.**

1-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுத்த சொத்தால் என்கிறான். சிங்காதனம் ஏன்? என்றால் மங்காத கீர்த்தி பெற என்கிறான். சிறைச்சாலை ஏன் என்றால், குற்றவாளிகளின் கொட்டத்தை அடக்க என்கிறான். காங்கிரஸ் ஏன்? சுதந்திரம் பெற, கம்யூனிசம் ஏன், பொதுஉடமையாக்க என்பதைப் போல், திராவிட முன்னேற்றக் கழகம் ஏன், என்றால், காங்கிரசுக்கும் தெரியவில்லை, அதன் தலைவர்களுக்கும் தெரியவில்லை! தெரிந்த ஒருசிலரும். 'திராவிடநாடு' தனியாகவேண்டும், என்று கேட்கின்றார்கள், இது முழுதிலும் அரசியல் சம்மந்தப்பட்ட பிரச்சினை. ஆனால் 'தேர்தலிலே நிற்பதில்லை', என்கிறார்கள். இது அரசியல் உரிமைகள் வேண்டாத ஒரு கட்சியின் கொள்கைப் போன்றது. இதன் அமைப்பு கொள்கைகள் விநோதமாக இருக்கின்றன. என்று,

நமது மதிப்புக்குரிய மந்திரிகளும், அவர்களைச் சார்ந்த கட்சியினரும்! ஏதேதோ, உளறுகிறார்கள். தேர்தலில் நின்று, அதிகப்படியான ஓட்டுகளைப் பெற்று, சட்டசபைகளைக் கைப்பற்றி நாட்டைத் தனியாக்க விரும்பவில்லை நாம் என்பது மாத்திரமல்ல இன்றைய குடியரசு சட்டங்களும் அதற்கு இடங்கொடுக்கவில்லை என்பது புரியாதவர்களல்ல, பலாத்காரப் புரட்சி நடத்தியா? என்றால் அதுவும் அல்ல அது நமது கொள்கைக்கு அப்பாற்பட்டது. மனித சமாதானத்திற்கு இடையூறானது. அதையும் நாம் பின்பற்றப் போவதில்லை. நாம் இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கையும் சரி, இனி எடுக்கப்போகும் நடவடிக்கைகளும் சரி. மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள நம் இயக்கத் தோழர்களுக்குத் தெரிவதற்கு முன்னால் மாகாண போலீஸ் தலைமைக்காரியாலயத்திற்கு உத்தியோகப் பூர்வமாக அறிவிக்கப்படும் என்பதை ஆட்சியாளருக்குச் சொல்ல விரும்புகின்றோம்.

பிறகு என்னதான் வழி? என்ற சந்தேகத்தின் பதில்தான், நியாயமாக ஒரு இயக்கத்தின் ராஜ தந்திரத்திலே அடங்கிய விவரிக்க முடியாத திட்டம். ஏனெனில், அரசியல் ஒரு சூதாட்டமல்லவா? இதுவரை அந்த அரசியல் சதுரங்கத்தில் வெற்றிகள் பல பெற்றவர்கள் உணர்ந்து கொள்ளட்டும் இதை, சாதுர்யமிருந்தால்!

ஊசியின் காதிலேயும் ஒட்டகத்தை நுழைத்தாலும் நுழைக்கலாம், நம் நாட்டு தேர்தலிலே ஒரு அறிவாளியைத் தேர்ந்தெடுப்பது கடினம் என்று இட்லர் சொல்லியதைப் போல்'வோட்'டினுடைய உண்மையான மதிப்பை அறியாத மக்கள் வாழும் நாட்டில், மாரியம்மன் கோவில் ஒன்றைக் கட்டி ஊராருக்குக் கொடுத்துவிட்டு, மந்திரியாய் வந்துவிட முடியும் என்ற நிலை நம்முடைய நாட்டில் தவிர வேறு எங்கேயும் காண முடியாத வேடிக்கையாகும். நமது நாட்டு தேர்தலைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், திருடன் ராஜா வேடத்தில் கன்னக்கோலை செங்கோலென ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் முறை என்று சொன்னால் பொருந்தும்.

## கோட்டைக்குள் குத்துவெட்டு

வரப்போகும் தேர்தலில் கட்சிகளோடு கட்சிகள் மோதவேண்டிய நிலைமையிருக்காது. ஏனெனில் காங்கிரஸ்கட்சியோடு பிறர் மோதவேண்டிய இடங்களிலெல்லாம், அவர்களுக்குள்ளேயே இடது சாரிகள், வலதுசாரிகள், முற்போக்கு பிற்போக்கு வாதிகள் தியாகிகள், தியாகிகள் அல்லாதார், வார்தா காங்கிரஸ், 'வார்குவாலிடி.' காங்கிரஸ், தேர்தல் பட்டியலைப் பார்த்து கதர்த் துணிக்கடைக்கு ஓடுபவர்கள், பணப்பேழைகள், சமய சந்தர்ப்பவாதிகள் ஆகியோர்களை ஒன்றுக் கொன்று முட்டி மோதிக்கொண்டு, பூமாலையை குரங்கு பிய்த்துத் தள்ளுவதைப் போலவோட்டுகளை சின்னாபின்னமாக்கிச் சீரழிந்து, நெருப்பை நெருப்பே பிடித்துக்கொண்டதைப் போன்ற நிலை ஏற்படப் போவதை நாம் கண்ணாலேயே பார்க்கப் போகின்றோம்!

## வடநாடும் தென்னாடும்

அகில இந்தியாவுக்கும் ஒரே அரசியல் சட்டமானபடியால் வடநாடு தென்னாடு என்று பிரித்துப் பேசுவது குற்றமாம். பேசுவதே குற்றமானால் அந்த பாகுபாட்டோடு நாட்டை நடத்துவது எவ்வளவு குற்றம்!

தென்னாட்டின் வருவாயிலிருந்து ஏறக்குறைய நூறுகோடி ரூபாய் பெற்றுக்கொண்டு, அவசரத்துக்குக் கடன் கேட்டால் ஆறுகோடியும் கொடுக்க முடியாதென்பது, தென்னாட்டான் சிங்களத்தீவில் கூலியாக வாழ, வடநாட்டார்களை அகதிகள் என்ற பேரால் இங்கே இறக்குமதி செய்து 4-லட்சம் நிலங்களை இனமாக வழங்கி, ரூபாய் மூன்றுகோடிக்குமேல் தானமாக வழங்கி, மருத்துவக் கல்லூரிகளில் இலவச படிப்பளித்து, ரயிலில் எங்கு வேண்டுமானாலும் போகலாம், எந்த வியாபாரம் வேண்டுமானாலும் செய்யலாம், என்று அவர்களைத் திரியவிட்டு, தென்னாட்டான் பணத்தையும் பிழைப்பையும் பறித்துக்கொண்டு தெருவில் திண்டாட விடுவதற்குப் பெயர் அகிலபாரதம்!

பேதம் பாராட்டாமல் இருக்க வேண்டுமென்றால், நம் நாட்டிலே வேலையில்லாதவர்களைக்கூட வேண்டாம். பிச்சைக்காரர்கள் மாத்திரம் நமது மாகாணத்தில் 65-லட்சம் பேர்களிருக்கின்றார்கள். அவர்களை வடநாட்டுக்குக் கொண்டுபோய், மானியமளித்து, இலவசக்கல்வி, இலவசப் பிரயாண வசதியளித்து அவர்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த வடநாட்டார், அல்லது மத்திய சர்க்கார் தயாரா? என்று கேட்கின்றோம்.

## வகுப்புவாதமாம்!

வகுப்புவாதம் பேசுகிறோமாம் எது வகுப்புவாதம் — வகுப்புகள் வேண்டாமென்று சொல்வது வகுப்புவாதமானால், திருச்சி, தஞ்சை ரயில்வே சந்திப்பில், வடநாட்டான் பலகாரக் கடை, (Noth Indian Sweet meat Stall) என்று விளம்பரப் பலகை போட்டு வியாபாரம் செய்ய லைசென்ஸ் அளித்திருக்கிறதே சர்க்கார். அது என்னவாதம்? திமிர் வாதமா? பிடிவாதமா?

'சோறுடைத்து சோழவளநாடு' என்ற பெருமைக்குரியவன், புளியங்கொட்டையை, பருத்திக்கொட்டையை, கத்தாழையைத் தின்று காலங்கழிக்கின்றான்! கைத்தறிக்கார

(6-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press 95. Tirukkachinambi Street Kancheepuram